15.02.16

தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

## ரூ.61.68 கோடியில் 68 லட்சம் மரக்கன்றுகள்: ஆலமரக்கன்றை நட்டு திட்டத்தைத் தொடங்கினார் முதல்வர்



தனது 68-ஆவது பிறந்தநாளையொட்டி, 68 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை முதல்வர் ஜெயலலிதா ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தார்.

ரூ.61.68 கோடி மதிப்பீட்டில் வனத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் தொடக்கமாக, சென்னை பெருநகரக் காவல் துறை ஆணையர் அலுவலக வளாகத்தில் ஆலமரக் கன்றை முதல்வர் நட்டார்.

வனம், மரங்களின் பரப்பை அதிகரிக்கும் நோக்கிலும், வனக்குக்கு வெளியே இருக்கும் காலியிடங்களில் அதிக எண்ணிக்கையில் மரக்கன்றுகளை நட்டு வளர்க்கவும் மாபெரும் மரம் நடும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி, ஒவ்வொரு ஆண்டும் மரக்கன்றுகள்நடப்படுகின்றன.

4 ஆண்டுகளில் 2.62 கோடி மரக்கன்றுகள்: முதல்வரின் பிறந்த

ஆண்டுகளை குறிக்கும் வகையில் 2012-இல் 64 லட்சம் மரக்கன்றுகளும், 2013-இல் 65 லட்சம் மரக்கன்றுகளும், 2014-இல் 66 லட்சம் மரக்கன்றுகளும், 2015-இல் 67 லட்சம் மரக்கன்றுகளும் என 2 கோடியே 62 லட்சம் மரக்கன்றுகள் இதுவரை நடப்பட்டுள்ளன. இந்த ஆண்டு முதல்வரின் 68-ஆவது பிறந்த நாளையொட்டி 68 லட்சம் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. பிப்ரவரியில் தொடங்கி டிசம்பருக்குள் வனப் பகுதிகள், பள்ளிகள், கல்லூரிகள், அரசு, தனியார் அலுவலக வளாகங்கள், சாலையோரங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரித்து பாதுகாக்கப்படும். என்னென்ன மரங்கள்? ஆலம், இலுப்பை, புன்னை, மந்தாரை, புங்கன், மகிழம், பூவரசு, வேம்பு உள்ளிட்ட பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடப்படுகின்றன. நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் எம்.எஸ்.எம். ஆனந்தன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி. வெங்கடாசலம், தலைமைச் செயலர் கு.ஞானதேசிகன், தமிழ்நாடு அரசு ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன், உள்துறை முதன்மைச் செயலர் அபூர்வ வர்மா, காவல்துறை தலைமை இயக்குநர் அசோக் குமார், சுற்றுச்சூழல், வனத்துறை முதன்மைச் செயலர் ஹன்ஸ் ராஜ் வர்மா, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் நா. கிருஷ்ணகுமார், காவல் ஆணையர் டி.கே. ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## இலளிகம் வேளாண் கூட்டுறவு சங்கத்தின் லாபம் ரூ.31.45 லட்சம்

இலளிகம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் கடந்த 2014-15ஆம் நிதியாண்டில் ரூ. 31.45 லட்சம் லாபம் ஈட்டியுள்ளது.

இலளிகத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கத்தின் 106-ஆவது ஆண்டு பொதுக்குழுக் கூட்டத்துக்கு சங்கத்தின் தலைவர் கே.தாமரைச்செல்வன் தலைமை வகித்துப் பேசியது:

சங்கத்தின் லாபத்தில் 14 சத பங்கு ஈவுத் தொகையாக உறுப்பினர்களுக்கு ரூ. 4.61 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 11 ஆண்டுகளாக லாபம் ஈட்டி வரும் இந்தச் சங்கம் கடந்த 9 ஆண்டுகளாக உறுப்பினர்களுக்கு பங்கு ஈவுத் தொகையை வழங்கி வருகிறது என்றார். கூட்டத்தில்

சங்கத்தின் துணைத் தலைவர் கே. அன்புகார்த்தி, செயலர் டி. செல்வமணி, உதவிச் செயலர் பி. தங்கம்மாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கொமராபாளையம் வாய்க்கால் மேம்பாட்டு பணிக்காக வரும் 15-ம் தேதி முதல் தண்ணீர் நிறுத்தம்

பரமத்தி வேலூர் வட்டம், பாண்டமங்கலம் அருகே உள்ள குச்சிபாளையத்தில் இருந்து எல்லைக்காட்டுப்புதூர் வரை செல்லும் கொமராபாளையம் வாய்க்காலின் மேம்பாட்டுப் பணிக்காக தமிழக அரசால் ரூ.8 கோடியே 38 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் துவங்கப்பட உள்ளன. இதன் காரணமாக வரும் 15-ம் தேதி முதல் கொமராபாளையம் வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்படும் என பரமத்தி வேலூர் பொதுப்பணித் துறை இளம் பொறியாளர் இளங்கோ தெரிவித்துள்ளார்.

கொமராபாளையம் வாய்க்கால் பாசனத்தை நம்பி 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது. இந்த கொமராபாளையம் வாய்க்கால் பாண்டமங்கலம் அருகே உள்ள குச்சிபாளையத்தில் இருந்து மோகனூர் அருகே உள்ள எல்லைக்காட்டுப்புதூர் வரையிலான சுமார் 17.4 கிலோ மீட்டர் தூரம் சென்று பாசன வசதியை அளித்து வருகிறது. இந்த கொமராபாளையம் வாய்க்காலை மேம்படுத்த வேண்டும் என பாசன வசதி பெறும் விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். அதன் அடிப்படையில் ரூ.8 கோடியே 38 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பழுதடைந்த பாலங்கள், தூண்கள் இல்லாத பாலங்களைப் புதுப்பித்தல், திறப்பானுடன் கூடிய மதகுகள் அமைத்தல், கரைகளை மேம்படுத்துதல், வாய்க்காலில் வலுவிழுந்த பகுதிகளில் தடுப்புச் சுவர் அமைத்தல் மற்றும் உபரி நீர் செல்லும் வழிபோக்கிகளை சீர் செய்தல் உள்ளிட்ட பணிகள் மூலம் மேம்படுத்தப்பட்ட உள்ளன.

இதற்காக கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கொமராபாளையம் வாய்க்கால் பாசன விவசாயிகளை அழைத்து கருத்துக் கேட்புக் கூட்டம் மூலம் முடிவு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில், வரும் 15-ம் தேதி முதல் கொமராபாளையம் வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்படவுள்ளது. விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு இப் பணிகளை விரைந்து

முடிப்பதற்காக 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, 6 ஒப்பந்ததாரர்கள் மூலம் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதனால் இப் பணிகள் அனைத்தும் விரைவாக முடிக்கப்படும் என பொதுப்பணித் துறை இளம் பொறியாளர் இளங்கோ தெரிவித்துள்ளார்.

## போச்சம்பள்ளி வாரச் சந்தையில் 10 டன் துவரை விற்பனை

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வாரச் சந்தையில் விவசாயிகள் தாங்கள் விளைவிக்கப்படும் சிறு தானியங்களை நேரடியாக விற்று பயனைடந்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த தரம் மிகுந்த துவரைப் பருப்புகளை வாங்குவதற்கு ஏராளமான வியாபாரிகள் போட்டியிட்டனர். கிலோ ரூ.85 வரை விற்கப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மானாவாரி பருவத்தில் விளைவிக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ள இந்த துவரைக்கு வெளி மாநிலங்களில் அதிக வரவேற்பு உள்ளது. போச்சம்பள்ளி,மத்தூர்,அரசம்பட்டி,நாகரசம்பட்டி, பாரூர், சந்தூர், வேலம்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் நிலக்கடலையுடன் ஊடுபயிராக துவரை பயிரிட்டு விளைவிக்கப்பட்டுள்ளது.

அறுவடை செய்யபட்ட துவரையை விவசாயிகள் நேரடியாக சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். கடந்த வாரம் ஒரு கிலோ துவரை ரூ.60-க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்யப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை 10 டன்னுக்கும் மேலான துவரை விற்பனைக்கு குவிக்கப்பட்டன.

இந்த வாரம் ஒரு கிலோ துவரை ரூ.82-முதல் ரூ.85 வரை விற்பனையானது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**உணவு கிடங்குகளில் மூலிகை விரட்டிகளை பயன்படுத்த நடவடிக்கை:உணவு கழக தமிழகக் குழுமத் தலைவர் தகவல்**

நாடு முழுவதும் உள்ள மத்திய அரசின் உணவு கிடங்குகளில் பூச்சிகளை கட்டுப்படுத்த ரசாயனத்துக்கு பதிலாக மூலிகை விரட்டிகளைப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக, இந்திய உணவுக் கழகத்தின் தமிழகக் குழுமத் தலைவர் திருச்சி சிவா கூறினார்.

சேலம் ஆண்டிபட்டி பகுதியில் உள்ள இந்திய உணவுக் கழகத்தின் உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்கில், உணவுக் கழகத்தின் தமிழகக் குழுமத் தலைவர் திருச்சி சிவா எம்.பி. ஆய்வு மேற்கொண்டார்.

உணவுக் கிடங்கில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருள்களின் தரத்தை அவர் ஆய்வு செய்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் திருச்சி சிவா கூறியது:

இந்திய உணவுக் கழகத்தின் சார்பில் உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்க தமிழகத்தில் மொத்தம் 57 கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கிடங்குகளில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ரசாயன பூச்சிகொல்லி மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஏற்கெனவே ரசாயனங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்களில் மேலும் ரசாயனங்களைக் கலப்பதைத் தவிர்க்க பரீட்சார்த்த முறைப்படி சேலம் கிடங்கில் தமிழகத்தில் விளையும் மூலிகைகளான வசம்பு, வேப்பிலை மற்றும் நொச்சி இலைகள் பூச்சி விரட்டிகளாகப் பயன்படுத்தப்பட்டன.

இந்த முறையானது நல்ல பலனைத் தந்துள்ளதால், இதனை தமிழகத்தில் உள்ள அனைத்துக் கிடங்குகளுக்கும் விரிவாக்கம் செய்வதுடன், மத்திய அரசிடம் பேசி இந்தியா முழுவதும் உள்ள அனைத்துக் கிடங்குகளிலும் மூலிகை பூச்சி விரட்டிகளைப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இம் முறைக்கு கூடுதல் செலவு ஆனாலும், ஆரோக்கியத்துடன் ஒப்பிடும்போது செலவு என்பது

இரண்டாம்பட்சம்தான். மத்திய அரசு, மாநில அரசுக்கு தரும் உணவுப் பொருள்கள் அனைத்தும் தரமானதாக உள்ளன.

மக்களிடம் தரமாகக் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பு மாநில அரசின் உணவுபொருள் வழங்கல் துறையிடம்தான் உள்ளது.

தமிழகத்தில் உள்ள சில கிடங்குகளுக்கு நேரடியான ரயில் சேவை ஏற்பாடு செய்தால் போக்குவரத்து சிரமங்கள், பொருள் செலவுகள் குறையும். இது தொடர்பாக மத்திய ரயில்வே துறையிடம் பேசி ரயில் சேவை பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்திய அரசு வழங்கும் உணவுப் பொருள்கள் கடத்தப்படுவதாகத் தகவல் கிடைத்தால் தலையிட்டு நடவடிக்கை எடுப்போம் என்றார்.

## அட்மா சார்பில் வேளாண் தொழில் நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை

அரியலூர் தாலுகா ராயம்புரம்,பட்டட்டான்குறிச்சி, நாகமங்கலம் ஆகிய கிராமங்களில் வேளாண்மைத் துறையின் அட்மா திட்ட பண்ணைப்பள்ளி சார்பில் நெற்பயிர்,கடலை, உளுந்து ஆகியவற்றின் சாகுபடியில் தொழில்நுட்பங்களை புகுத்துதல் குறித்து செயல் விளக்கத்தோடு விவசாயிகளுக்கு அண்மையில் ஆலோசனை வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு வேளாண் உதவி இயக்குநர் மோகன் தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் பழனிசாமி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில்,நெல்,உளுந்து,கடலை ஆகிய சாகுபடிகளுக்கு ஏற்ற பருவங்கள் மற்றும் ரகங்கள்,விதை நேர்த்தி செய்யும் முறைகள், திருந்திய நெல் சாகுபடியின் மூலம் நாற்றங்கால் தயாரிக்கும் முறைகள், ஒருங்கிணைந்த உர மேலாண்மை பற்றி தொழில்நுட்பங்கள் குறித்து கிரீடு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் ராஜ்கலா,ஜோஸ்லின் ஆகியோர் செயல் விளக்கம் அளித்தனர். தொடர்ந்து விவசாயிகளின் கேள்விகளுக்கு விளக்கம் அளித்தனர். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சுந்தரமூர்த்தி,வாசுகி,உதவி வேளாண் அலுவலர்கள் ஆதிநாராயணன், மேகனாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முடிவில் விவசாயி செல்லப்பிள்ளை நன்றி கூறினார்.

## கூறைடெக்ஸ் பட்டு உற்பத்திச் சங்கத்தில் மேலாண்மை இயக்குநர் ஆய்வு

மயிலாடுதுறை, கூறைநாட்டில் இயங்கி வரும் கூறைடெக்ஸ் பருத்தி பட்டு நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கத்தில் கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் டி.என்.வெங்கடேஷ் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு செய்தார்.

ஆய்வுக்குப் பின்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்தபேட்டி:

கூறைப்பட்டுச் சேலைகள் தமிழக முழுவதிலும் உள்ள கோ-ஆப்டெக்ஸ் கிளைகளிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. அதேபோல், தமிழகம் உள்ளிட்ட பிற மாநிலங்களில் நடைபெறும் கண்காட்சியின்போது, விற்பனைக்கு வைக்கப்படும் கூறைப்பட்டுச் சேலைகள் உடனடியாக விற்பனையாகி விடுவது கூறைப்பட்டுச் சேலைக்கு கூடுதல் சிறப்பு.

பழைமையும், புதுமையும் கலந்து இச்சேலைகள் தயாரிக்கப்படுவதால், பண்டிகைக் காலங்களில் இச்சேலைகளின் விற்பனை அதிகரிக்கின்றன. கடந்த 2015 பொங்கல் விழாவின்போது ரூ. 69 கோடிக்கு பட்டுச் சேலைகள் விற்பனையாகின.

நடப்பாண்டு விற்பனை ரூ. 74 கோடியாக அதிகரித்துள்ளது என்றார் அவர். திருபுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கத் துணிக் கட்டுப்பாட்டு அலுவலர் எம். ராஜேந்திரன், கைத்தறி இயக்குநர் ராதாகிருஷ்ணன், ஆடை உற்பத்திகள், வடிவமைப்பு மேலாளர் ஆர்.சீனிவாசன், கூறைடெக்ஸ் பருத்தி, பட்டு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சஙங்கத்தின் தலைவர் மணிமேகலை உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

**மாதுளையின் மகத்துவம்**

மாதுளை மகாராஷ்டிராவில் இருந்து தான், அதிகமாக தென் மாநிலங்களுக்கு வருகிறது. பெண்ணின் உள்ளத்தில் மறைந்து இருக்கும் ரகசியங்களை போல, முத்துக்கள் மறைந்து இருப்பதால் தான் மாதுளை என பெயர் தமிழில் வந்ததாம்.சமஸ்கிருதத்தில் இதனை தாடிமம் என்பர். 'மார்னிங் சிக்னஸ்' எனப்படும் கர்ப்ப காலத்தின் துவக்க பிரச்னைகளுக்கு தீர்வு தர, ஆயுர்வேத மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்படும் மருந்துக்கு 'மாதுளங்கா ரசாயனம்' என்றே பெயர் சூட்டப்பட்டுள்ளது. மாதுளையில் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என 3 வகைகள் உள்ளன.

**அரபிக்கடலில் கலக்கும் ஆறுகள்**

இந்தியாவில் பெரும்பான்மையான ஆறுகள் வங்காள விரிகுடாவில் தான் கலக்கின்றன. ஆனால் கைலாஷ் மலைத்தொடரில் உற்பத்தியாகி பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் ஓடும் சிந்து நதி அரபிக்கடலில் கலக்கிறது. அமர்கண்டக் மலையில் உற்பத்தியாகி குஜராத், மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா மாநிலங்களில் ஓடும் நர்மதா நதியும் அரபிக் கடலில் கலக்கிறது. பச்மாரி மலையில் உற்பத்தியாகி அதே குஜராத், மத்தியபிரதேசம்,மகாராஷ்டிரா மாநிலங்கள் வழியாக ஓடும் தப்தி நதியும்அரபிக்கடலில் கலக்கிறது.

## 'நதிநீர் இணைப்பை விரைவு படுத்துங்கள்': பா.ஜ., விவசாயிகள் அணி வலியுறுத்தல்

ஈரோடு: 'நதிநீர் இணைப்பை விரைவுப்படுத்த வேண்டும்' என, பா.ஜ., விவசாயிகள் அணி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
ஈரோடு மாவட்டம் கவுந்தபாடியில், பா.ஜ., சார்பில் உழவர் விழிப்புணர்வு மாநாடு நடந்தது. பா.ஜ., விவசாய அணி தேசிய தலைவர் விஜய்பால் சிங் தோமர் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: நதிநீர் இணைப்பில், மத்திய, மாநில அரசுகள் பங்களிப்பு செய்கிறது. எனவே, இத்திட்டத்தை விரைவு படுத்தவேண்டும். அவிநாசி-அத்திக்கடவு திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். காவிரி - வசிஷ்ட நதி இணைப்பு திட்டம், மாநிலத்தில் உள்ள ஏரி, குளங்கள் ஆக்கிரமிப்புக்களை அகற்றி செப்பனிட்டு, விவசாய நீராதாரமாக மட்டுமே பயன்படுத்த வேண்டும். தமிழகத்தில் உள்ள அனைத்து பிரதான வாய்க்கால்களையும் கான்கிரீட் தளமாக மாற்றி, கடைமடை விவசாயிகளுக்கும் நீரை உறுதி செய்ய வேண்டும். தமிழகத்தில் விவசாயிகள் நலனுக்காக, 4,530 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கமும், 23 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியும், 11 ஆயிரத்து, 503 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கமும், 11 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்கமும் செயல்படுகிறது. இங்கு, கடந்த ஐந்தாண்டாக தேர்தல் நடத்தப்படவில்லை. ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்த வேண்டும். மாநில அரசு, மஞ்சளுக்கு குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயிக்க வேண்டும். விலை குறையும்போது, நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும். கோபி கணக்கம்பாளையம் கிராமத்தில் அமைய உள்ள, வேதபாறை நீர்த்தேக்க திட்டத்தை, மாநில அரசு நிறைவேற்ற, மத்திய அரசு உதவி வழங்க வேண்டும். தேங்காயின் உப பொருட்களான மட்டை, நார், தொட்டி, தேங்காய் எண்ணெய்க்கு, உலகளவில் தேவை உள்ளது. அதற்கு தேவையான தொழில் நுட்பம், ஏற்றுமதி வாய்ப்பை கண்டறிந்து, அதன் மூலம் நல்ல வருவாயை

விவசாயிகளுக்கு பெற்றுத்தர வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தென்னையில் கருந்தலைப்புழு தாக்குதல் அதிகரிப்பு: கட்டுப்படுத்தும் முறை விளக்கம்

கிருஷ்ணகிரி: தென்னையில் கருந்தலைப்புழு தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து, கிருஷ்ணகிரி வேளாண்மை இணை இயக்குனர் சபா நடேசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குனர் சபா நடேசன் கூறியதாவது: தென்னை மரத்தை தாக்கும் கருந்தலைப்புழுவின் இளம் புழுக்கள் பச்சைக்கலந்த பழுப்பு நிற உடலையும், கரும்பழுப்பு நிற தலையையும் உடையதாக இருக்கும். இப்பூச்சி தாக்குதலை உழவியல் முறைகளை கடைபிடிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். தாக்கப்பட்ட ஓலைகளை கோடைக்காலம் துவங்கும் முன் வெட்டி எடுத்து அழித்து விட வேண்டும். பெத்திலிட் மற்றும் பிராக்கானிட் என்ற குடும்பங்களைச் சார்ந்த ஒட்டுண்ணிகள், இலைகளின் அடிபாகத்தில் விடுவதால், புழுக்கள் கட்டுப்படுத்தப்படும். இவ்வகை ஒட்டுண்ணிகள் வேளாண்மைத்துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இப்புழுக்களின் தாக்குதல் ஒட்டுண்ணிகளால் கட்டுப்படுத்த முடியாமல் அதிகரிக்கும் போது, ஓலையின் அடிப்பகுதிகளில் நன்கு படுமாறு டைக்குளோர்வாஸ் ரசாயன மருந்து தெளிப்பு செய்து கட்டுப்படுத்தலாம். தாக்குதல் தீவிரமாக இருக்கும் போது நன்கு வளர்ந்த புதிய வேரை தேர்வு செய்து, சிறிய அளவில் சரிவாக வெட்டி மோனோகுரோட்டோபாஸ், 10 மி.லிட்டருடன், 10 மி.லிட்டர் நீர் கலந்த கரைசல் இருக்கும் பாலிதீன் பையினில் வேர் பகுதி மூழ்குமாறு அமைத்து கரைசல் வேர் மூலம் உறிஞ்சப்படுவதை உறுதி செய்து, தாக்குதலை கட்டுப்படுத்தலாம். மேலும் தரையில் இருந்து, 1 மீட்டர் உயரத்திற்கு மரத்தின் தண்டு பகுதியில் துளையிட்டு 10 மி.லி., மோனோகுரோட்டோபாஸ் மருந்தை ஊசி மூலம் செலுத்தியும் இத்தாக்குதலை கட்டுப்படுத்தலாம். மருந்து உறிஞ்சப்பட்டவுடன், அத்துளையினை காப்பர் ஆக்ஸி குளோரைடு கலந்த களிமண் கொண்டு

அடைத்துவிட வேண்டும். ஒட்டுண்ணிகள் விடப்பட்டிருந்தால், விடப்பட்ட நாளில் இருந்து, 21 நாட்களுக்கு பிறகே ரசாயன மருந்துகளை இட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## பயிர் கழிவுகளைபயன்படுத்த பயிற்சி

திண்டுக்கல்:ஒட்டன்சத்திரம் வேளாண்மைத்துறையின் சார்பில் அட்மா திட்டம் மூலம் விவசாயிகளுக்கு பயிர் கழிவுகளை திறம்பட பயன்படுத்துல் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிர் எச்சத்தைப் பயன்படுத்தி இயற்கை உரம், ஊட்டமேற்றிய உரம் தயாரித்தல் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இதில் வேளாண்மை உதவி இயக்குனர் அருணாசலம் பேசியதாவது:"" பயிர் கழிவு மேலாண்மை மூலம் மண் வளம் அதிகரிக்ககும். நீர் பிடிப்பு தன்மையும் அதிகரிக்கிறது", என்றார். ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

## மலர் சாகுபடி செய்வதில் விவசாயிகள். ஆர்வம்! குறுகிய காலத்தில் லாபம் கிடைப்பதால் மகிழ்ச்சி

விழுப்புரம்: குறுகிய காலத்தில் கூடுதல் லாபம் கிடைப்பதால், மலர் சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

தமிழகத்தின் மிகப் பெரிய மாவட்டமான விழுப்புரத்தில், விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. கரும்பு, நெல், மணிலா, உளுந்து, மரவள்ளி உள்ளிட்ட பயிர் சாகுபடியில் தொ டர்ந்து விவசாயிகள் ஈடுபட்டு வந்தனர். கரும்பு, நெல், மணிலா உள்ளிட்ட பயிர்களுக்கு உரிய விலை கிடைக்காததால், கடந்த சில ஆண்டுகளாக விவசாயிகளுக்கு பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டது. மேலும் இந்த வகை பயிர்களுக்கு கூடுதல் ஆட்கள் தேவை உள்ளது. ஆனால் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தால் கூலி ஆட்கள் கிடைப்பது கடும் சிரமமாக உள்ளது. இதனால் கடந்த சில ஆண்டுகளாக சவுக்கு சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வந்தனர். இதன் பரப்பளவு மற்றும் விளைச்சல் கூடுதலானதால், சவுக்கிற்கும் விலை ஏற்றம் இல்லாமல் போனது.

இதனால், விழுப்புரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தற்போது விவசாயிகள் மலர் சாகுபடியில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். பூச்செடிகள் நடவு செய்து, மூன்று முதல் ஆறு மாதத்திற்கும் மலர் சாகுபடிக்கு தயாராகி விடுகிறது. இதற்கு, குறைந்த அளவு ஆட் கள் தேவை மற்றும் பாசன வசதி இருந் தால் போதுமானதாக உள்ளது.

மேலும் வீட்டு தோட்டம் முதல் பல ஏக்கர் பரப்பளவிலும் மலர் சாகுபடி செய்யப்படுகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் பூக்கள் சென்னை, விழுப்புரம், திண்டிவனம், கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட முக்கிய நகரப் பகுதிகளுக்கு விவசாயிகள் நேரடியாக எடுத்துச் சென்று விற்பனை செய்கின்றனர்.

இதில், முகூர்த்த நாட்களில் பூக்களின் விலை வழக்கத்தை விட இருமடங்கு விற்பனை செய்யப்படுவதால், விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கிறது.அதோபோல் கார்த்திகை மாதத்தில் அய்யப்பன் கோவில் சீசன், ஆடி மாதத்தில் அனைத்து கோவில்களிலம் நடக்கும் திருவிழாவிற்கு பூக்கள் தேவை அதிகம் இருப்பதால், எப்போதும் பூக்கள் தேவை அதிகமாகவே உள்ளது.

தற்போது மல்லிகைப் பூ ஒரு கிலோ 450 ரூபாயும், சம்மங்கி பூ, கிலோ 200 ரூபாய்க்கும், ரோஜா ரகங்கள் கிலோ 200 ரூபாய்க் கும், கனகாம்பரம் பூ கிலோ 1,000 ரூபாய்க்கும், காக்காட்டான் பூ கிலோ 200 ரூபாய்க்கும் விலை போகிறது.

பூக்களை விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணமும் கிடைக்கிறது. இதனால், மலர் சாகுபடி செய்யும் விவசாயிகள், பணத்திற்காக காத்திருக்க வேண்டிய நிலை இல்லை. ஆனால் தானியப் பயிர்களை மார்க்கெட் கமிட்டிக்கு விற்பனைக்கு கொண்டு சென்றாலும், வியாபாரிகள் தான் விலையை நிர்ணம் செய்கின்றனர்.

ஆனால் மலர் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள், எங்கு கூடுதல் விலை கிடைக்கிறதோ, அங்கு விற்பனை செய்து, உடனுக்குடன் பணம் பார்த்து விடுகின்றனர். மழை மற்றும் வெயில் காலங்களில் மலர் சாகுபடியில் பெரிய அளவில் நட்டம் ஏற்படுவது இல்லை.

மலர் சாகுபடிக்கு, குறைந்தளவு பாசனம் இருந்தால் போதுமானது. மேலும் குறைந்த பட்சம் 5 சென்ட் முதல் பலர் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் மலர் சாகுபடி செய்கின்றனர். இவற்றை தினமும், காலை, மாலை என இரு வேலைகளில் அறுவடை செய்து, அருகிலுள்ள நகரப் பகுதியில் எடுத்துச் சென்று உடனுக்குடன் விற்பனை செய்து, பணம் பார்க்கின்றனர். மலர் அறுவடையில் சிறுவர்கள் மற்றும் முதியவர்கள் கூட இதில் எளிதில் ஈடுபடுகின்றனர்.

இதனால், விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் தற்போது மலர் சாகுபடியில் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

### சிக்காட்டில் கால்நடை மருத்துவமனை

உளுந்தூர்பேட்டை: சிக்காடு கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனையை துவங்கப்பட்டது.

உளுந்தூர்பேட்டை ஒன்றியம், சிக்காடு கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனை திறப்பு விழா நடந்தது. குமரகுரு எம்.எல்.ஏ., தலைமை தாங்கி, குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். கால்நடை உதவி இயக்குநர் டாக்டர் ராஜன் முன்னிலை வகித்தார்.

ஆத்மா திட்ட தலைவர் கோவிந்தன் வரவேற்றார். உதவி மருத்துவர்கள் தமிழரசு, முருகேசன், பாலசுப்ரமணியன், ஒன்றிய சேர்மன் பாலு, துணை சேர்மன் சாய்ராம், அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் மணிராஜ், முன்னாள் மாவட்ட அவை தலைவர் ராமசாமி, ஊராட்சி தலைவர் பாப்பா பாலகிருஷ்ணன், ஜெ., பேரவை தலைவர் சீனிவாசன், ஊராட்சி செயலாளர் வேணு, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சுப்ரமணியன், நிர்வாகிகள் முத்துகிருஷ்ணன், வெங்கடேசன், முருகன், வீரன், முனுசாமி,

இளங்கோவன், மனோகர், ரவி, குணசேகர், சம்மந்தமூர்த்தி, வைத்தியநாதன், மணிமுத்து, ஏழுமலை, பிரபாகரன், அன்னியப்பன், ராமகிருஷ்ணன், திவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பள்ளியில் பாலிதீனுக்கு தடை;ஒன்றியத்திற்கு ஒரு லட்சம் மரக்கன்றுகள்

ஊஞ்சாம்பட்டியில் ரீட் தொண்டு நிறுவனம் சார்பில் தேனி பைபாஸ் - அன்னஞ்சி 5 கி.மீ., நீள ரோட்டில் 1,000 மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது. பள்ளிக்குழந்தைகள் நட்டனர். மக்கள் பங்களிப்புடன் நிதி திரட்டி மூன்று ஆண்டுகளுக்கு நீர் ஊற்றி பராமரிக்க உள்ளனர். திட்டத்தை துவக்கி வைத்த மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் முருகேசன்,""மரங்கள் இருந்தால்தான் மனிதன் உயிர்வாழ முடியும் என்பதை உணர்ந்து ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் அறிமுகம் செய்துள்ளோம். இதற்கு நாற்றங்கால் தயாராகி வருகிறது. இதை அரசு மட்டும் செய்ய முடியாது. தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் மரக்கன்றுகள் நட முன்வர வேண்டும்,"என்றார்.

## மூலிகைப்பொடி தூவி தானியங்கள் பாதுகாப்பு: மத்திய கிடங்கில் ஆலோசனைக்குழு ஆய்வு

சேலம்: "மத்திய உணவு கழக கிடங்கில் மூலிகைப்பொடி தூவி, உணவு தானியங்கள் பாதுகாக்கப்படும்," என, தமிழ்நாடு ஆலோசனைக்குழு தலைவர் சிவா கூறினார்.

இந்திய உணவு கழகத்தின், தமிழ்நாடு ஆலோசனைக்குழு கூட்டம், சேலத்தில் நேற்று நடந்தது. முன்னதாக ஆலோசனைக்குழு தலைவர் திருச்சி எம்.பி., சிவா தலைமையில், 17 பேர் கொண்ட குழுவினர், சிவதாபுரம் இந்திய உணவு கிடங்கில் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வுக்கு பின் தலைவர் சிவா கூறியதாவது: இந்திய உணவு கழகம் வழங்கும் தானியங்களை சேமிக்க, தமிழகத்தில், 57 மத்திய கிடங்குகள் உள்ளன. திண்டுக்கல்லில் நடந்த ஆய்வில் பூச்சி, புழுக்களால், உணவு தானியம் சேதமானது தெரிந்தது. உணவு பொருட்களை பாதுகாக்கவும் பூச்சிக்கொல்லி பயன்படுத்துவது வேதனை. எனவே, வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் ஆலோசனைப்படி, பூச்சிக்கொல்லியை விட, பூச்சிவிரட்டி பயன்படுத்த, 25 ஆயிரம் டன் கொள்ளளவு கொண்ட சேலம் குடோனில் ஆய்வு நடந்தது. வசம்புபொடியை உணவு தானியம் மீது தெளித்தும், வேம்பு, நொச்சி தழைகளை, குடோன்களில் பரப்பி, அதன்மீது, உணவு பொருட்கள் வைத்து பாதுகாக்கப்பட்டது. அதனால், பாதிப்புக்கு பதிலாக, பாதுகாப்பாக ஆரோக்கியமாக உள்ளது. இதற்கு, சற்று கூடுதல் செலவாகிறது. நோய் தடுப்பு, ஆரோக்கியத்தை பார்க்கும் போது, செலவினம் இரண்டாம் பட்சம். இதேபோல, நாடு முழுவதுமுள்ள மத்திய கிடங்குகளில், மூலிகைப்பொடி தூவி உணவு தானியங்கள் பாதுக்காக்க பரிந்துரைக்கப்படும்.

இந்திய உணவு கழகம், ஆண்டுக்கு, 34 லட்சம் டன் அரிசி, 2 லட்சம் டன் கோதுமையை தமிழகத்துக்கு ஒதுக்கீடு செய்கிறது. இவை, தரமாகவும் சரியான அளவில் வினியோகம் செய்யப்படுகின்றன. சேலம் வரும் உணவு தானியம், 14 கி.மீ., தொலைவில் இருந்து, லாரிகளில் குடோனுக்கு கொண்டு வரப்படுகிறது. இந்த சிரமத்தை தவிர்க்க, ரயில் தடத்தில் இருந்து, மூன்று கி.மீ., தூரத்துக்கு, குடோன்வரை தண்டவாளம் அமைக்க, இந்திய உணவு கழகம், 7 கோடி ரூபாய் மதிப்பில் திட்ட மதிப்பீடு தயார் செய்துள்ளது. ரயில்வே அனுமதிபெற்று, இத்திட்டம் செயல்படுத்தப்படும். குடோனுக்குள் சரக்கு ரயில் வரும் வசதி, தமிழகத்தில், நான்கு இடத்தில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## கால்நடை கிளை நிலையம் திறப்பு

ஆத்தூர்: ஆத்தூர் அருகே, பைத்தூர் பஞ்சாயத்தில் பைத்தூர், வானபுரம், கல்லுக்கட்டு, தவளப்பட்டி, பைத்தூர் புதூர், அம்மன் நகர், பாய்கடை, நயினார்பாளையம், அண்ணா நகர் உள்பட, 14 குக்கிராமங்கள் உள்ளன. பைத்தூர் பகுதிவாசிகள், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடு, மாடுகள் வளர்த்து வருகின்றனர். இவைகளுக்கு, மருத்துவ சிகிச்சை அளிக்க, 12 முதல், 16 கி.மீ., தூரம் உள்ள மஞ்சினி கால்நடை மருந்தகத்துக்கு சென்று வந்தனர். கால்நடை மருந்தகம் அமைக்கக்கோரி, இப்பகுதிவாசிகள் பல ஆண்டுகளாக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். அதன்படி நேற்று, பைத்தூர், பாய்கடை கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க கட்டட வளாகத்தில், தற்காலிகமாக கிளை நிலையத்தை, ஆத்தூர் எம்.எல்.ஏ., மாதேஸ்வரன் திறந்து வைத்தார். இதில், கால்நடை மருத்துவ அலுவலர் சந்திரசேகரன் உள்பட, பலர் கலந்து கொண்டனர்.

## ஆத்தூர் உழவர் சந்தையில் ஆய்வு: பசுமை தீர்ப்பாய நீதிபதி நற்சான்று

ஆத்தூர்: ஆத்தூர் உழவர் சந்தையில், இயற்கை முறை சாகுபடி காய்கறிகள் விற்பனை செய்வது குறித்து, ஆய்வு பணி மேற்கொண்ட பசுமை தீர்ப்பாய நீதிபதி பாராட்டு தெரிவித்தார்.

ஆத்தூர், புதுப்பேட்டை உழவர் சந்தையில், நேற்று முன்தினம், பசுமை தீர்ப்பாயம் நீதிபதி ஜோதிமணி, காய்கறி விற்பனை குறித்து ஆய்வு பணி மேற்கொண்டார். அப்போது, விவசாயிகள் சிலர், 'சென்னை, கோவை, மதுரை போன்ற பெரு நகரங்களில், மாலை நேர காய்கறி அங்காடிகள் துவங்கினால், சுகாதாரமான காய்கறிகள் விற்பனை செய்ய முடியும். இயற்கை முறை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, மத்திய, மாநில அரசு ஊக்கம் வழங்க வேண்டும்' என, கோரிக்கை விடுத்தனர். அதற்கு நீதிபதி ஜோதிமணி, "சென்னையில், மாலை நேர காய்கறி அங்காடி அமைப்பது மற்றும் இயற்கை முறை சாகுபடி விவசாயத்துக்கு முன்னுரிமை

வழங்குவது குறித்து, அரசுக்கு பரிந்துரை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார். தொடர்ந்து, உழவர் சந்தை அலுவலக ஆய்வு குறிப்பு நோட்டில், 'ஆத்தூர் உழவர் சந்தை மிக சிறந்த முறையில், நடைபெறுவது மகிழ்ச்சியான செயல். அதிகாலையில், அருகில் உள்ள விவசாயிகள், இயற்கை விவசாயத்தின் மூலம் சாகுபடி செய்த காய்கறிகளை ஒருங்கிணைத்து, தரம் வாரியாக விற்பது சிறந்த முறையாகும். இதுபோன்ற சந்தைகள் மூலம், மக்களுக்கு தரமான காய்கறிகள் கிடைப்பது நமக்கு பெருமையாகும்' என, நீதிபதி ஜோதிமணி, எழுதி வைத்து சென்றதால், உழவர் சந்தை அலுவலர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## கறவை மாடுகள் வாங்க ரூ.58.10 லட்சம் வழங்கல்

தலைவாசல்: தலைவாசல் ஒன்றியம், ஆறகளூர் பகுதியில் செயல்பட்டு வரும் குழுக்களுக்கு, கறவை மாடுகள் வாங்க, புதுவாழ்வு திட்டத்தின் மூலம், 58.10 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. புதுவாழ்வு திட்டம் மூலம், தமிழக அரசு, பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, கிராமப்புறங்களில் உள்ள குழுக்களுக்கு கறவை மாடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கறவை மாடுகள் வாங்க, நிதி வழங்கும் கூட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், ஒட்டப்பட்டு சமுதாய நலக்கூடத்தில் நடந்தது. இதில், தலைவாசல் ஒன்றியம், ஆறகளூர் பகுதியில் செயல்பட்டு வரும், 166 உறுப்பினர்களுடன், 36 வகையான குழுக்களுக்கு, கறவை மாடுகள் வாங்குவதற்காக, நபார்டு வங்கியின் உதவியுடன், 58.10 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதில், புதுவாழ்வு திட்டக்தின், மாநில திட்ட துணை இயக்குனர் மேகலதா, மாவட்ட திட்ட இயக்குனர் தரணி மற்றும் அணி தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## சதுப்புநில காடுகள் அழியும் :பாதுகாக்க வனத்துறை முயற்சி

ராமநாதபுரம்:நன்னீர் வரத்து குறைதல், மரங்களை வெட்டுதல் போன்ற காரணங்களால் அழியும் நிலையில் உள்ள சதுப்புநில காடு களை கடலோர மக்கள் உதவி யோடு பாதுகாக்கும் முயற்சியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.ஆறுகள் கடலில் சேருமிடங் களில் சதுப்புநிலக் காடுகள் காணப்படுகின்றன. இந்த காடுகள் சுனாமி, புயல், கடல்நீர் ஊருக்குள் புகுதல் போன்றவற்றில் இருந்து கடலோர பகுதிகளை பாதுகாக் கிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் பாக் ஜலசந்தியில் கண்ணாமுனை, முத்துரகுநாதபுரம், திருப்பாலைக் குடி உப்பூர், காந்திநகர், மோர் பள்ளம் உள்ளிட்ட 12 இடங்கள் மற்றும் மன்னார் வளைகுடாவில் திருப்புல்லாணி கோரைக் குட்டத்தில் காணப்படுகின்றன. இவை 556.11 எக்டேர் பரப்பில் உள்ளன. இந்த காடுகளில் கண்டன், நரிகண்டன், மரமா உள்ளிட்ட 48 வகையான மரங்கள் காணப்படு கின்றன. இங்கு மிதவை, இறால், நண்டு, மீன் உள்ளிட்ட உயிரி னங்கள் அதிகளவில் உள்ளன. இந்த மரங்களின் வேர்கள் "கேபிள்' போன்று பூமிக்குள் செல்லும். இவற்றின் விதைகள் நீரில் விழுவதால் எளிதில் முளைப்ப தில்லை. எதிர்பாரத விதமாக மண்ணுக்குள் புதைந்தால் மட்டுமே முளைக்கும். சிலசமயங்களில் தாய் மரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் போதே விதைகள் முளைத்துவிடும். பின் அவை கீழே விழுந்து முளைக்க ஆரம்பிக்கும். இதற்கு முளைப்புத் திறன் குறைவால் எளிதில் பெருக்க மடைவதில்லை.

நன்னீர் வரத்து குறைவு, விறகு களுக்காக மரங்களை வெட்டுதல், நீரின்றி காய்ந்து போதல் போன்றவற்றால் சதுப்புநிலக் காடுகள் அழிந்து வருகின்றன.

இவற்றின் பரப்பை குறையாமல் பாதுகாக்கும் முயற்சியில் அப்பகுதி மக்கள் உதவியுடன் வனத் துறையினர் ஈடுபட்டுள்ளனர்.வனத்துறையினர் கூறியதாவது: மரங்கள் அழிந்துபோகும் இடங் களில் மறு உருவாக்கம் செய்து வருகிறோம். ஆண்டிற்கு 5 முதல் 10 எக்டேர் வரை விதைகளை நடவு செய்கிறோம்.

இதில் குறிப்பிட்ட விதைகள் மட்டுமே முளைக் கின்றன. நன்னீர் வரத்தை அதிகரிக்க ஏற்பாடு செய்கிறோம். சதுப்புநில காடுகளின் நன்மை மக்களிடம் எடுத்துகூறி அவற்றை பாதுகாக் கிறோம், என்றனர்.

## தென்னையில் ஊடுபயிர்: லாபத்தை தரும் வாழை

சிங்கம்புணரி: சிங்கம்புணரி வட்டாரத்தில் தென்னை மரங்களுக்கிடையே ஊடு பயிராக வாழை பயிரிட்டு விவசாயிகள் லாபம் ஈட்டுகின்றனர்.சிங்கம்புணரி- எஸ்.புதூர் ஒன்றியத்தில் இறவை பாசனத்தில் தென்னை சாகுபடி செய்யப் படுகிறது.ஒரு தென்னை மரத்திற்கும் இன்னொரு மரத்திற்கும் 30 அடி வரை இடைவெளி விடப்படுகிறது. இந்த இடை வெளியில் வாழை ஊடுபயிர் சாகுபடி செய்கின்றனர். தென்னைக்கு பாயும் நீரில் வாழை செழித்து வளர்கிறது. ஒரு முறை வாழை ஊடுபயிர் செய்தால் 3 வருடம் வரை காய், இலை அறுவடை செய்யப் படுகிறது.

வாழை மரகழிவு தென்னைக்கு இயற்கை உரமாக அமைகிறது. நீர் பாசன வசதியுள்ள விவசாயிகள் பலரும் தென்னையில் வாழையை ஊடுபயிர் செய்கின் றனர்.

கட்டுக்குடிப்பட்டி விவசாயி அடைக்கண் கூறியதாவது: மதுரை கொட்டை வாழை ரகம் 4 ஏக்கர் தென்னையில் ஊடுபயிர் செய்தேன்.தென்னையில் ஆண்டுக்கு 6 முறை தேங்காய் இறக்குவோம். வாழையில் காய் வெட்டுவதை தவிர்த்தால் இலை அதிகம் கிடைக்கும். திருமணம், விழாக் காலங்களில் இலை ஒன்று ரூ 3 வரை நல்ல கிராக்கியுடன் விற்பனையாகிறது.வியாபாரிகள் தோப்பிற்கே வந்து வாங்கிச் செல்கின்றனர். ஏக்கருக்கு வாழையில் ஆண்டிற்கு ரூ.50 ஆயிரம் லாபம் கிடைக்கிறது என்றார்.

**மீன் வளர்ப்பு பயிற்சி**

அருப்புக்கோட்டை:அருப்புக்கோட்டை அருகே எம். ரெட்டியபட்டி திருமலைபுரத்தில் பண்ணை குட்டையில் மீன் வளர்ப்பு பயிற்சி நடந்தது. ஊராட்சி தலைவர் தனலட்சுமி தலைமை வகித்தார். மாவட்ட மீன் வளத்துறை ஆய்வாளர் முகமது பானு, டேவிட் பயிற்சி அளித்தனர். பண்ணை குட்டையில் மீன் வளர்ப்பு முறை சிறந்த வருமானம், வேலை வாய்ப்பு உருவாகும், பொருளாதாரம் மேம்படுத்தும் என்று விளக்கினர். பண்ணை குட்டை அமைப்பது, அதற்கான நிலம், நீர் மட்டம், குள அமைப்பு, மண் வகை, அமைக்கும் முறை பற்றி செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது. மேலும், வத்திராயிருப்பு பிளவக் கல் அணை பகுதியில் மானிய விலையில் மீன் குஞ்சுகள், தீவனங்கள் வழங்கப்படுவதாக விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஏற்பாடுகளை தொழில் நுட்ப மேலாளர் முத்துகருப்பன் தலைமையில், உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் வீரபாண்டி, முனீஸ்வரி செய்தனர்.

**மரங்களை வளர்ப்போம்... "மாசு' வை தவிர்ப்போம்...**

சுகாதாரமான காற்று, தூசியில்லா நகரம், தூய்மையான சுற்றுபுறத்தைதான் இன்று பலரும் விரும்பு கின்றனர். அதன்பயன்பாடே சிறிது சிறிதாக தாங்கள் வசித்து வரும் பகுதியை தூய்மையாகவும், மரங்கள், செடிகள் வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதன் முதல் படியாக வீடுகளில் காலி பகுதிகளில் பயனுள்ள மற்றும் மருத்துவ குணம் கொண்ட செடிகளை வளர்க்க துவங்கி உள்ளனர். பொது நல அமைப்பினரோ நீர்நிலைகளின் கரை பகுதியில் மரங்களை வளர்க்க ஏற்பாடு செய்கின்றனர். இதுபோன்று அருப்புக்கோட்டை கஞ்சமநாயக்கன்பட்டியை சேர்ந்த மின் பொருட்கள் விற்கும் கடை <உரிமையாளரான ஜவஹர் , தன் வாழ்க்கையில் எவ்வளவு முடியுமோ அத்தனை மரங்களை வளர்த்து பராமரித்து வருகிறார்.

ஆண்டுக்கு 400 மரங்கள்

இயற்கை ஆர்வலரான இவர் மரங்களின் பாதுகாவலனாகவும் விளங்கி வருகிறார். ஆண்டுக்கு 200 முதல் 400 மரங்கள் வரை நட்டு பராமரித்து

வருகிறார். தனது கிராமத்தில் உள்ள 15 ஏக்கர் பெருமாள் கோயில் ஊரணியை சுற்றி "பென்சிங்' அமைத்து சுற்றிலும் மரக் கன்றுகளை நட்டுள்ளார். அரசு அலுவலக வளாகம் , பள்ளிகள் மற்றும் கிராம பொது இடங்கள், ரோட்டோரம் என காலி இடங்கள் எவ்வளவு இருந்தாலும் அங்கு மரக்கன்றுகளை நடுகிறார். தும்பகுளம் கண்மாயை கரையை அகலப்படுத்தி அதன் கரையை யொட்டி மரங்களை வளர்த்துள்ளார். கோயில் நிகழ்ச்சிகள், கும்பாபிஷேகங்கள் எது நடந்தாலும் அரச மரக் கன்றுகளை வழங்கி அதை வளர்க்க ஊக்கப்படுத்துகிறார்.

பன்னீர் பூ :இயற்கை உரங்களையே பயன்படுத்தும் இவர் ,வீட்டில் தென்னை, வேம்பு, மூலிகை மரங்கள், பன்னீர் பூ, மகிழம் பூ, சந்தன மரம், பாக்கு மரம், மனோரஞ்சிதம், பலா மரம், ஸ்டார் புரூட்ஸ் என பலவகை மரங்கள் , பூக்கள், தாமரை, அல்லி என மணம் வீசும் பூக்களையும் வளர்த்து வருகிறார் .இதுவே இயற்கை மீது இவர் கொண்டுள்ள பற்றுதலை காட்டுகிறது .

மரம் வளர்க்க சட்டம்:ஜவஹர் கூறுகையில்,""நான் பல விதமான மரக்கன்றுகளை வளர்க்கிறேன். யார் கேட்டா லும் இலவசமாக கொடுக்கிறேன். எனது கிராமம் மற்றும் அருப்புக்கோட்டை நகர், மரங்கள் அடர்ந்து செழிப்பாக வேண்டும் என்பது எனது குறிக்கோள். நான் இதை தனி மனிதனாக தான் செய்கிறேன். அதிக மரங்கள் வளர்த்து பராமரிக்கும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும். இதன் மூலம் மாணவர்களிடையே மரங்கள் வளர்ப்பதில் ஆர்வம் அதிகம் வளரும். மேலும் அரசு அலுவலர்கள் கட்டாயம் குறைந்த பட்சம் ஆண்டுக்கு 5 மரங்களையாவது நட்டு பராமரிக்க வேண்டும் என்பதை சட்டமாக்க வேண்டும்,"என்றார். இவரை பாராட்ட 93456 78949.

சர்க்கரை நோயை விரட்டும்

மாடி தோட்டம்

ரமேஷ் (அருப்புக்கோட்டை): மரம் வளர்ப்போம், மழை பெறுவோம் என்பதற்கேற்ப ஒவ்வொருவரும் ஒரு மரம் வளர்க்க வேண்டும் . வீடுகள் மாடியில் தோட்டம் அமைத்து அன்றாட வாழ்விற்கு தேவையான

காய்கறிகளை வளர்க்கலாம். மூலிகை செடிகளையும் வளர்க்கலாம். இயற்கை முறையில் வரும் காய்கறிகளை பயன்படுத்தினால் உடலுக்கு நல்லது. இது மனத்திற்கு மகிழ்ச்சியை கொடுக்கும்.

மாடி தோட்டத்தை 8 வடிவ முறையில், வடக்கு தெற்காக அமைத்து தினமும் அரை மணி நேரம் இதில் நடந்து வந்தால் சர்க்கரை வியாதி காணாமல் போகும், ரத்த அழுத்தமும் ஏற்படாது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோவை வேளாண் பல்கலைக்கழக உதவி பேராசிரியருக்கு 3 பதக்கம்

அரூர், : தர்மபுரி மாவட்டம், அரூரை சேர்ந்தவர் டாக்டர் பரணிதரன். மேட்டுப்பாளையம் வனக்கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறார். மேட்டுப்பாளையத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது. இவர், இந்திய வன உயிரியல் ஆராய்ச்சி நிலையத்தில் கடந்தாண்டு நவம்பர் 2015 முதல் ஜனவரி 2016 வரை மூன்று மாத கால சான்றிதழ் வன உயிரியல் மேலாண்மை படிப்பில் கலந்து கொண்டார். இவருடன் மேலும் இந்தியா, பர்மா மற்றும் மலேசியா நாட்டைச் சேர்ந்த 24 வனத்துறை அதிகாரிகள் பங்கேற்றனர். பயிற்சியின் முடிவில் சிறந்த மாணவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பரணிதரனுக்கு, வன உயிரியல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர், மத்தூர் வன உயிரியல் ஆராய்ச்சி நிலைய முன்னாள் இயக்குனர் முக்கர்ஜி ஆகியோர் வன உயிரின பாதுகாப்பு பிரிவில் ஒரு தங்க பதக்கம், வன உயிரின வல்லுனர் பிரிவு மற்றும் வன உயிரின மேலாண்மையில் 2 வெள்ளி பதக்கம் வழங்கி கவுரவித்தனர். விருது பெற்ற டாக்டர் பரணிதரனுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

## முட்டை விலை உயர்வு : 372 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்ந்து, 372 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், முட்டை விலை 2 காசு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 372 காசாக உயர்ந்துள்ளது. என்.இ.சி.சி நிர்ணயம் செய்யும் விலையில் இருந்து 20 காசு குறைத்து தான், பண்ணையாளர்கள் முட்டை விற்பனை செய்கின்றனர். அந்த விலைக்கு தான் வியாபாரிகளும் வாங்கி செல்கின்றனர். என்.இ.சி.சி நிர்ணயம் செய்யும் விலையில் இருந்து 20 காசு மைனஸ் என்பது தான் அதிகாரப்பூர்வமாக விலையாக நாமக்கல்லில் உருவாகியுள்ளது. இந்நிலையில், தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு (என்.இ.சி.சி) ஒரு முட்டை விலையில் 2 காசு உயர்த்தியுள்ளது. இதனால், சில்லறை விற்பனை கடைகளில் தான் முட்டை விலை உயர வாய்ப்பு உள்ளது. பண்ணையாளர்களுக்கு எந்த பயனும் இல்லை என பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர். ஒரு கிலோ முட்டைக்கோழி □60 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி □62 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**தி.மலை, விழுப்புரம் மாவட்டங்களில் 50 ஆயிரம் ஏக்கர் பயன் பெறும் சாத்தனூர் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு வினாடிக்கு 490 கன அடி நீர் வெளியேற்றம்**

திருவண்ணாமலை, : சாத்தனூர் அணையில் இருந்து விவசாய பாசனத்துக்கு சுழற்ிசி முறையில் நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. அதன்மூலம், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் 50 ஆயிரம் ஏக்கர் பாசன வசதிபெறும். அணையில் இருந்து வினாடிக்கு 490 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. கடந்த ஆண்டு இறுதியில் பெய்த கன மழையால், நான்கு ஆண்டுகளுக்கு பிறகு சாத்தனூர் அணை முழுமையாக நிரம்பியது. தற்போது, அணையின் நீர்மட்டம் 119 அடியாகவும், நீர் கொள்ளளவு 7,321 மில்லியன் கன அடியாகவும் உள்ளது. எனவே, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, விவசாய பாசனத்துக்கு நேற்று பகல் 2.30 மணி முதல் தண்ணீர் திறக்கப்பட்டது. கலெக்டர் ஞானசேகரன் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில், அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் பாசனத்துக்கு தண்ணீரை திறந்து வைத்தார். அதில், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் கோவிந்தராஜ் , உதவி பொறியாளர் ரமேஷ், எம்பி வனரோஜா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் நைனாகண்ணு, பாசன சங்க தலைவர் ஜெயராமன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். அதன்படி, சுழற்சி முறையில் 90 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளது. மேலும், 30 நாட்களுக்கு ஒருமுறை 5 நாட்கள் இடைவெளிவிட்டு தண்ணீர் திறக்கப்படும். முதற்கட்டமாக வரும் 27ம் தேதி வரை சாத்தனூர் அணையின் வலதுபுற கால்வாய் வழியாக வினாடிக்கு 200 கன அடியும், இடதுபுற கால்வாய் வழியாக வினாடிக்கு 290 கன அடியும் தண்ணீர் திறக்கப்படுகிறது. வரும் 27ம் தேதி முதல் மே 22ம் தேதி வரை வலதுபுற கால்வாய் வழியாக வினாடிக்கு 370 கன அடியும், இடதுபுற கால்வாய் வழியாக வினாடிக்கு 220 கன அடியும் தண்ணீர் திறக்கப்படும். அதன்மூலம், திருவண்ணாமலை மாவட்டத்தில் 19,463 ஏக்கர், விழுப்புரம் மாவட்டத்தில், 30,537 ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதிபெறும். மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் 34

ஏரிகளும், விழுப்புரம் மாவட்டத்தில், 72 ஏரிகளும் இதன்மூலம் பயன்பெறும் வாய்ப்புள்ளது. திருக்கோவிலூர் பழைய ஆயக்கட்டு பகுதியில் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான சாகுபடிக்கும் தண்ணீர் கிடைக்கும்.

## அரூர் அருகே வரட்டாறு அணை பாசனத்திற்கு திறப்பு 5108 ஏக்கர் பயனடையும்

அரூர், : அரூர் அடுத்த கீரைப்பட்டி ஊராட்சி வள்ளி மதுரையில் உள்ள வரட்டாறு அணைக்கட்டு பாசனத்திற்காக திறக்கப்பட்டது. இதன் மூலம் 5108 ஏக்கர் பாசன வசதி பெறும். அரூர் அடுத்த கீரைப்பட்டி ஊராட்சி வள்ளி மதுரையில் உள்ள வரட்டாறு அணைக்கட்டு பாசனத்திற்காக திறக்கப்பட்டது. மொத்தம் 34.45 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணை தற்போது முழுவதுமாக நிரம்பி உள்ளது. விவசாய பயன்பாட்டிற்காக, 50 நாட்களுக்கு ஒரு முறை வைத்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு மொத்தம் 5108 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் வகையில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பழைய ஆயக்கட்டு பகுதியில் உள்ள 10 ஏரிகள் மற்றும் அணையின் இடது புறம் மற்றும் வலது புற வாய்கால்களில் உள்ள15 ஏரிகள் என மொத்தம் 25 ஏரிகளுக்கு தண்ணீர் செல்லும் வகையில் வினாடிக்கு 30 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதன் மூலம் அரூர் வட்டத்தில் உள்ள வள்ளிமதுரை, தாதரவலசை, சாமநத்தம், கீரைப்பட்டி, குடுமியாம்பட்டி, அச்சல்வாடி, எல்லபுடையாம்பட்டி, நாச்சினாம்பட்டி, கௌாப்பாறை, ஈட்டியம்பட்டி, மாம்பாடி, செல்லம்பட்டி, மாவேரிப்பட்டி, கம்மாளம்பட்டி உள்ளிட்ட 15 கிராமங்கள் பயனடைகின்றன. மாவட்ட கலெக்டர் விவேகானந்தன் அணைக்கட்டை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் எம்எல்ஏ டில்லிபாபு, வருவாய் கோட்டாட்சியர் கவிதா, செயற்பொறியாளர் பாலசுப்ரமணியம், ஒன்றிய குழு தலைவர் தென்னரசு, ஒன்றிய செயலாளர் முருகன், ஊராட்சி மன்றத் தலைவர் தீர்த்தகிரி, கீரை சம்பத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நாகாவதி அணையில் பாசனத்திற்கு நீர் திறப்பு கால்வாயை தூர்வார வலியுறுத்தல்**

பென்னாகரம், : பென்னாகரத்தில் நாகாவதி அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தண்ணீர் செல்லும் கால்வாயை தூர்வார வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். பென்னாகரம் ஒன்றியத்தில் நாகாவதி அணை உள்ளது. இந்த அணையின் கொள்ளளவு **27** அடியாகும். இந்த அணை நிரம்பினால், இங்கிருந்து திறந்து விடப்படும் உபரிநீர் எர்ரப்பட்டி, சின்னம்பள்ளி, அரக்காசன அள்ளி, பள்ளிமுத்தானூர், காளநாயக்கனஅள்ளி, கன்னம்பள்ளி, ராசிராவுத்தனள்ளி, தோலூர், பெத்தானூர், அத்திமரத்தூர், சாணாரப்பட்டி, பெரும்பாலை, கொம்பாடியூர், பள்ளிப்பட்டி, கெண்டயனள்ளி, புதுார் வழியாக மேட்டூர் அணையை வந்தடையும். இந்த அணையின் தண்ணீர் மூலம் சுமார் **3** ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த அணையின் ஓடையில் வரும் தண்ணீரை நம்பி எர்ரப்பட்டி, அரக்காசன அள்ளி, சின்னம்பள்ளி, பெரும்பாலை, கெண்டயனூர் ஆகிய **5** ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில், நாகாவதி அணை கடந்த **10** ஆண்டுகளுக்கு பிறகு நிரம்பியுள்ளது. மொத்த கொள்ளளவான **27** அடியில் தற்போது **26** அடிக்கு தண்ணீர் காணப்படுகிறது. இதையடுத்து, பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட பொதுப்பணித்துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் பல ஆண்டுகளாக இந்த அணையில் இருந்து தண்ணீர் செல்லும் கால்வாய் தூர்வாரப்படவே இல்லை. இதன் காரணமாக அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் முழுமையாக செல்லாமல், ஆங்காங்கே தேங்கி நின்று விடும் அபாயம் உள்ளது. இதன் காரணமாக தண்ணீர் திறந்து விட்டும், பாசனத்திற்கு பயன்படாத பரிதாபமான சூழ்நிலை உருவாகும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். இதுகுறித்து ஏரியூர் ஒன்றிய திமுக செயலாளர் செல்வராஜ் கூறுகையில், ' வருகிற சட்டமன்ற தேர்தலை மனதில் கொண்டு, தற்போது நாகாவதி அணையில் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கால்வாயை முறையாக

தூர்வாராமல் தண்ணீரை திறந்து விடுவதால் விவசாயிகளுக்கு எந்த பிரயோஜனமும் இருக்காது. இதை கண்டித்து கட்சி தலைமையின் அனுமதி பெற்று திமுக சார்பில் நடத்தப்படும்' என்றார்.

## நெற்பயிரில் இலைக்கருகல் நோய் கட்டுப்படுத்த அறிவுரை

கிருஷ்ணகிரி, : நெற்பயிரில் இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்த கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சபாநடேசன், விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம் மற்றும் பர்கூர் வட்டாரங்களில் சுமார் 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் பரவலாக தென்படுகிறது. தீவர தாக்குதல் ஏற்படும் போது 60 சதம் வரை தானிய மகசூல் இழப்பு ஏற்படும். தாக்குதல் காணப்படும் நெற்பயிரின் இலைப்பரப்பின் மீது நீரில் நனைத்தது போன்ற மஞ்சள் நிற வரிகளுடன் இலைகள் காய்ந்து, பின் சுருண்டும் இலை நடு நரம்பு பழுதடையாமல் காணப்படும். அதிகாலை நேரங்களில் இளம்புள்ளிகளின் மேல் பால் போன்ற அல்லது பனித்துளி போல் திரவம் வடிதல் காணப்படும். தீவிர தாக்குதல் ஏற்பட்ட இலைகள் விரைவில் காய்ந்துவிடும். நோய் தாங்கும் திறனுள்ள ரகங்களை பயிரிடுதல் மற்றும் நோயற்ற விதைகளை பயன்படுத்துதல் மூலம் நோய் தாக்குதலில் இருந்து பயிரை காத்துக்கொள்ளலாம். மேலும் பயிர் நடவு செய்யும் போது, நாற்றுக்கள் கத்தரிக்காதவாறு பார்த்து கொள்ள வேண்டும். மிகுதியான தழைச்சத்து அளிப்பதை தவிர்க்க வேண்டும். வயலில் நீர் தேங்கி நிற்காமல் வடிகட்ட வேண்டும். நோய் தாக்கப்பட்ட வயலில் இருந்து நீர் மற்ற வயல்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். அத்துடன் நெற்பயிரில் பாக்டீரியா இலைக்கருகல் நோய் தாக்குதல் காணப்பட்டால் 3 சதம் வேப்ப எண்ணெய் அல்லது 5 சதம் வேப்பங்கொட்டையிலிருந்து எடுத்த சாற்றை தெளிக்கலாம். மேலும் ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட், டெட்ராசைக்லின் கலவை 300 கிராமுடன், காப்பர் ஆக்சிக்குளோரைடு 1.25 கிலோ/எக்டர் கலந்து தெளிக்க வேண்டும். தாக்குதல் மீண்டும் காணப்பட்டால் 15 நாட்களுக்கு பின் ஒரு முறை இக்கலவையை

தெளித்து தாக்குதலை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**குண்டடம், கன்னிவாடி சந்தைகளில் ஆடுகள் விலை உயர்வு**

தாராபுரம், : தாராபுரம் அடுத்த குண்டடம், கன்னிவாடி சந்தைகளில் வரத்து குறைவால் ஆடுகளின் விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் பல்வேறு ஆட்டுச் சந்தைகள் இருந்தாலும் திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தை அடுத்த கன்னிவாடி, குண்டடம் ஆட்டுச் சந்தைகளுக்கு தனி மவுசு உண்டு. இந்த சந்தை வாரம்தோறும் கன்னிவாடியில் வெள்ளிக்கிழமையும், குண்டடத்தில் சனிக்கிழமையும் கூடுகின்றன. இந்த சந்தைகளுக்கு திருப்பூர், கோவை, பொள்ளாச்சி, உடுமலை, மதுரை, திருச்சி, சென்னை போன்ற தமிழகத்தின் பெருநகரங்கள் மட்டுமின்றி கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநில வியாபாரிகளும் இங்கு வந்து ஆடுகளை வாங்கிச் செல்கின்றனர். அதே போல், கன்னிவாடி மற்றும் மூலனூர், வெள்ளக்கோவில், ஜோதியம்பட்டி, மேட்டுக்கடை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் தங்களது ஆடுகளை விற்பனைக்காக இங்கு கொண்டு வருகின்றனர். இதுகுறித்து, திருப்பூர் ஆட்டு வியாபாரி செல்வம் கூறியதாவது: குண்டடம், கன்னிவாடி மற்றும் இதன் சுற்றுவட்டார பகுதிகளில் நல்ல மேய்சல் உள்ளது. ஆடுகளுக்குத் தேவையான பசுமை தீவனங்கள் தடையின்றிக் கிடைக்கின்றன. இதனால் விவசாயிகள் ஆடுகளை வளர்ப்பதில் நல்ல ஆர்வம் காட்டி வருகின்றனர். எனவே குண்டடம், கன்னிவாடி ஆட்டுச் சந்தைகளுக்கு கடந்த மூன்று வாரங்களாக ஆடுகள் வரத்து குறைந்துள்ளது. இந்த சந்தைகளில் ஆடுகளின் விலை, அதன் எடையை பொறுத்தே நிர்ணயிக்கப்படுகிறது. அதனடிப்படையில் கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.450 ஆகவும், இந்த வாரம் ரூ.50 அதிகரித்து ரூ.500 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. சுமார் 10 கிலோ எடை கொண்ட ஆடு, ரூ.4,900க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த வாரம் கன்னிவாடி சந்தையில் சுமார் 5 ஆயிரம் ஆடுகளும், குண்டடத்தில் 3 ஆயிரம் ஆடுகள் மட்டுமே

விற்பனைக்கு வந்திருந்தன. இதனால், இரு சந்தைகளிலும் ஆடுகளுக்கு நல்ல கிராக்கி இருந்தது.

## சிவன்மலை கோவில் கொடிமரத்தில் அறுவடைக்கு முன் நெற்கதிர் வைத்து நேர்த்திக்கடன் செலுத்தும் விவசாயிகள்

காங்கயம், : காங்கயம் அடுத்துள்ள சிவன்மலையில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் விளைந்த நெற்கதிர்களை, கோயில் கொடிமரத்தில் வைத்து வழிபடுகின்றனர். திருப்பூர் மாவட்டம், சிவன்மலை முருகன் கோவில் மிகவும் பிரசித்தி பெற்றது. இப்பகுதி விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் நெல் நாற்று விடும் முன், விதை நெல்லை இக் கோவில் வளாகத்தில் உள்ள கொடிமரத்தின் முன்வைத்து, விளைச்சல் நன்றாக இருக்க வேண்டுமென பூஜை செய்த பின்னர், வயல்களில் விதைத்து விவசாயம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். பின்னர், அறுவடை மாதமான தை மற்றும் மாசியில் வயல்களில் அறுவடை செய்யும் முன் நெற்கதிர்களை கொடிமரத்தில் கட்டி வைத்து பூஜை செய்கின்றனர். சிலர், அறுவடை முடித்து தங்கள் வயல்களில் விளைந்த நெல்லை மூட்டைகளில் கொண்டு வந்து காணிக்கையாகச் செலுத்தி, தங்கள் நேர்த்திக் கடன்களை செலுத்துகின்றனர். திருப்பூர் மாவட்டம் நத்தக்காடையூர், பழையகோட்டை, முத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டம் சென்னிமலை, அரச்சலூர், விளக்கேத்தி பகுதிகளில் நெல் அறுவடை நடைபெற்று வருகிறது. இந்தப் பகுதி விவசாயிகள் வயல்களில் விளைந்த நெல்லை சிவன்மலை கோவில் கொடிமரத்தின் முன்வைத்து வழிபட்டுச் செல்கின்றனர்.

## தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி

ஊட்டி, : ஊட்டி தோட்டக்கலைத்துறை வட்டார வேளாண்மை வி◌ா◌ிவாக்க சீரமைப்பு திட்டம், 2015-16 வேளாண்மை வி◌ா◌ிவாக்க இயக்கம் மற்றும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு

தோட்டக்கலையில் புதிய தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு சென்றடைந்து உற்பத்தியினை இருமடங்காக அதிகரித்து வருமானத்தை மும்மடங்காக பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மாவட்ட அளவில் விவசாயிகளுக்கான பயிற்சிகள் நடைபெற்று வருகிறது. முத்தோரை மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண் கழிவு மேலாண்மை தொழில்நுட்பம் குறித்தும், கூடலூர் மாங்கோடு கிராமத்தில் ஜீரோ பட்ஜெட் பண்ணையம் குறித்த பயிற்சி, தங்காடு கிராமத்தில் தேயிலையில் இயந்திர அறுவடை மற்றும் கவாத்து குறித்து தொழில்நுட்ப பயிற்சி, குன்னூர் உபாசி வேளாண் அறிவியல் நிலையத்தில் தேயிலையில் சில்வர் டிப்ஸ் உற்பத்தி, கையினால் தயாரிக்கப்படும் தேயிலை தூள், தேயிலையில் மதிப்பு கூட்டிய பொருட்கள் தயாரிப்பு தொழில்நுட்பம் என்பன உள்ளிட்ட பயிற்சிகள் தொடர்ச்சியாக விவசாயிகளுக்கு நடத்தப்பட்டது. மாயாரில் ஏற்றுமதி காய்கறி உற்பத்தி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி, மசினகுடி கிராமத்தில் புறக்கடையில் நாட்டுகோழி வளர்ப்பு முறை, பி.மணியட்டி கிராமத்தில் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்பாடு குறித்த பயிற்சி, சிங்காரா கிராமத்தில் வெள்ளாடு வளர்ப்பு குறித்த பயிற்சி, சோலாடா கிராமத்தில் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்பாடு குறித்த பயிற்சி, கல்லக்கொரை ஆடாவில் நுண்ணீர் பாசனம் மற்றும் பராமரிப்பு தொழில்நுட்பம் குறித்த பயிற்சி, லவ்டேல் பாரணி கிராமத்தில் பால் பண்ணையம் குறித்த பயிற்சி, அப்புக்கோடு கிராமத்தில் மொட்டு காளான் உற்பத்தி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. தொடர்ந்து காம்பட்டி கிராமத்தில் இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு குறித்த பயிற்சிகளும் விவசாயிகளுக்கு பல்துறை வல்லுனர்கள் மூலம் நடத்தப்பட்டது. 15 நாட்கள் நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளையும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரம்யா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ஜான்போஸ்கோ, அஸ்வினி ஆகியோர் செய்திருந்தனர்.

## மாநில பயிற்சி முகாம் திருச்சி விவசாயிகள் பங்கேற்பு

தா.பேட்டை : முசிறி, தா.பேட்டை, தொட்டியம், துறையூர், மணப்பாறை, மருங்காபுரி, வையம்பட்டி, உப்பிலியபுரம் பகுதிகளை சேர்ந்த 40

விவசாயிகளுக்கு திண்டிவனத்தில் மாநில அளவிலான பயிற்சி முகாம் நடைபெற்றது. வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் நிலக்கடலை மற்றும் எள் பயிர்களில் உயர் விளைச்சல் பெறுவதற்கான தொழில்நுட்ப பயிற்சி திண்டிவனம் எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது.3 நாள் பயிற்சி முகாமில் நிலக்கடையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, தரமான விதை உற்பத்தி, அறுவடைக்குப்பின் செய் நேர்த்தி குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும் நிலக்கடலை, எள் பயிர்களில் உயர் விளைச்சல், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் குறித்து திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சந்திரசேகரன், மாவட்ட வேளாண் துணை இயக்குநர் சரவணன் உள்ளிட்ட வேளாண் அலுவலர்கள் பயிற்சி அளித்தனர்.

## சண்முக நதியின் குறுக்கே தடுப்பணை கட்ட பூமிபூஜை

திருச்சி, : திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் அடுத்த திருப்பட்டூர் கிராமத்தில் உள்ள சண்முகநதியின் குறுக்கே ரூ.1.01 கோடி செலவில் தடுப்பணை கட்ட பூமி பூஜை நேற்று நடந்தது. இதில் அமைச்சர் பூனாட்சி கலந்து கொண்டார். பின்னர் அவர் கூறுகையில், நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் பெய்யும் மழைநீர் திருச்சி மாவட்டம் திருப்பட்டூர் வழியாக உப்பாறு அணைக்கட்டிலிருந்து பெருவளை வாய்க்கால் நீருடன் கலக்கிறது. பின், இதிலிருந்து உப்பாறாக செல்லும் இந்த வழியாக நக்கம் கொள்ளிடம் ஆற்றில் வீணாக கலக்கிறது. வீணாக கலக்கும் இந்த நீரை மக்களுக்கு பயனளிக்கும் வகையில் சண்முகநதியின் குறுக்கே தடுப்பணை கட்டப்படுகிறது. 18 மீட்டர் நீளம், 1.20 மீட்டர் உயரத்தில் அமைகிறது. உச்சவெள்ள நீர் வெளியேற்றும் அளவு வினாடிக்கு 4,061 கனஅடி. தடுப்பணையின் கொள்ளளவு 0.362 மில்லியன் கனஅடி. இதன் மூலம் 90 கிணறுகள் நீர் ஊற்றம் பெறுவதுடன், 365.99 ஏக்கர் விவசாயம் நிலம் பாசன வசதி பெறும்' என்றார். மண்ணச்சநல்லூர் ஒன்றிய துணை தலைவர் வெற்றிச்செல்வி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 50 ஆயிரம் வெளிநாட்டு பறவைகள் வர வாய்ப்பு

அரியலூர்,: அரியலூர் அருகேயுள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் தஞ்சம் புகும் பறவைகளின் எண்ணிக்கையை கணக்கெடுக்கும் பணிகளுக்காக தஞ்சை தமிழ்பல்கலைகழகத்தின் சார்பில் கல்லூரி மாணவர்கள் முகாமிட்டுள்ளனர். இதில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பறவைகளின் வரத்து அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் பறவைகளின் சரணாலயமாக வேடந்தாங்கல், கோடியக்கரை, கூத்தன்குளம் என பல்வேறு சரணாலயங்கள் இருந்து வருகிறது. அந்த வரிசையில் அரியலூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்க்கும் விதமாக கரைவெட்டி பறவைகள் சரணாலயம் இருந்து வருகிறது. மற்ற சரணாலயங்களைவிட அதிக பரப்பளவில் 454 எக்டர் கொண்ட இந்த கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் ஆண்டு தோறும் பறவைகளின் வரத்து அதிகரித்து வருகிறது. இதை கணக்கெடுக்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட வனத்துறை சார்பில் கல்லூரி மாணவர்களை கொண்டு பறவைகளின் எண்ணிக்கையை கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி இந்தாண்டும் பறவைகளின் கணக்கெடுக்கும் பணிக்காக தஞ்சை தமிழ் பல்கலைகழக கல்லூரி மாணவர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள் அடங்கிய 30 பேர் கொண்ட குழுவினர் கடந்த 2 நாட்களாக தீவிர பணியில் ஈடுபட்டனர். மாவட்ட வனத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த தொலைநோக்கி மூலம் மாணவர்கள் பலதூரம் சென்று பறவைகளின் எண்ணிக்கைகளை குறிப்பெடுத்துக் கொண்டனர். இந்த பணிகள் நேற்றோடு நிறைவடைந்தது. வனத்துறை சார்பில் மாணவர்களுக்கு கரைவெட்டி பறவைகள் சரணாலயம் குறித்த கையேடுகளும் வழங்கப்பட்டது. இதைத்தொடர்ந்து பறவைகளின் எண்ணிக்கையின் இறுதி அறிக்கையை ஒரு வார காலத்திற்குள் மாவட்ட வனத்துறை அலுவலகத்திற்கு தஞ்சை தமிழ்பல்கலைகழக மாணவர்கள்தர உள்ளனர்.

இதையடுத்து சுற்றுலா பயணிகளின் வருகையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, கடந்தாண்டு 50,831 பின்னர் இதுகுறித்து மாவட்ட வனத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, அரியலூர்

மாவட்டத்தில் அமைந்துள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் அக்டோபர் முதல் பிப்ரவரி மாதம் வரையிலான காலம் இச்சரணாலயத்தை கண்டுகளிக்க சிறந்த காலமாகும். திருச்சியில் இருந்து 50கி.மீ தொலைவிலும், தஞ்சாவூரில் இருந்து 35 கி.மீ தொலைவிலும் உள்ளது. அரியலூரில் இருந்து 18 கி.மீ.தொலைவில் இச்சரணாலயம் அமைந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இந்த சரணாலயத்திற்கு பல வகையான வெளிநாட்டு பறவைகள் தஞ்சம் புகுந்து இளைப்பாறுகின்றன. மேலும் இந்த ஏரியின் மொத்த நிலப்பரப்பில் 149 வகையான பறவை இனங்கள் வருகை தருகின்றன. இதில் முக்கிய பறவைகளான செங்கால் நாரை, நத்தைக்கொத்தி நாரை, வெள்ளை அரிவாள் மூக்கன், பாம்பு தாரா, நீர்காகம், நாராயணபட்சி, கூழைக்கிடா மற்றும் 16 வகையான வாத்துக்கள், 23 வகையான உள்ளான்கள் ஆகியவை முக்கியவையாகும். இங்கு பறவைகள் அக்டோபர் மாதம் முதல் வரத்தொடங்கி மார்ச் மாதம் முடிய தங்கியிருக்கின்றன. இதில் சிலவகையான நிலப்பறவைகள் ரோஸ்மைனா, வல்லூறுகள், மீன்கொத்திகள், கழுகுகள், மற்றும் கருடன் போன்றவை இங்கு வருகை தருவதுடன் பலவகை அரிய பறவைகளும் வருவதாக தகவல் தெரிவிக்கின்றன. இந்த ஏரியின் குளிர்ச்சியான சீதொசன நிலை, தேவையான உணவு, தங்குவதற்கும் முட்டையிடுவதற்கும் தேவையான மரங்கள் அடந்த சூழ்நிலை இருப்பதால் பறவைகள் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இந்த ஏரிக்கு வந்து தங்கி முட்டையிட்டு குஞ்சு பெறித்து விட்டு மீண்டும் ஏப்ரல், மே மாதங்களில் தங்கள் நாடுகளுக்கு பயணம் செய்கின்றன. கடந்தாண்டில் இச்சரணாலயத்தில் நடத்திய கணக்கெடுப்பில் 50 ஆயிரத்து 831 பறவைகள் வந்துள்ளதாக குறிப்பெடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் இந்தாண்டும் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பறவைகளின் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது என அவர்கள் தெரிவித்தனர்.

## விதைநேர்த்தி செய்தால் அதிக மகசூல் பெறலாம்

அரியலூர், : நெற்பயிரில் விதைநேர்த்தி செய்வது அவசியம் என வேளாண் தொழில் நுட்ப முகாமில் வேளாண்மை அதிகாரி தெரிவித்தார். அரியலூர் ஒன்றியம் ராயம்புரம் கிராமத்தில் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் விரிவாக்க சீரமைப்பு திட்டம் மற்றும் அட்மா திட்டத்தில் நெல்லில் ஒருங்கிணைந்த பயிர் சாகுபடி குறித்து தொழில் நுட்ப மேலாண்மை முகாம் நடைபெற்றது. முகாமில் அட்மா திட்ட தொழில் நுட்ப மேலாளர் பழனிசாமி வரவேற்றார்.வேளாண் உதவி இயக்குனர் மோகன் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். முகாமில் சோழமதேவி கிரீடு வேளாண்மை அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுனர்கள் ராஜா ஜோஸ்லின், ராஜ்கலா ஆகியோர் நெற்பயிரில் உள்ள தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். இதைத் தொடர்ந்து நடைபெற்ற முகாமில் அரியலூர் வேளாண்மை உதவி இயக்குனர் மோகன் பேசியதாவது: நெற்பயிரில் ஏற்ற பருவங்கள் மற்றும் அதன் ரகங்களை அறிந்து விவசாயிகள் பயிரிட வேண்டும், மேலும் இப்பயிரில் விதை நேர்த்தி செய்தல் என்பது அவசியமான ஒன்றாகும். இதன் மூலம் விவசாயிகள் அதிக மகசூல் பெறமுடியும், திருந்திய நெல் சாகுபடியில் நாற்றாங்கால் தயாரித்தல், நாற்றங்காலில் நீர் நிர்வாகம், விதை நேர்த்தி செய்தல் ஆகிய தொழில் நுட்பங்கள் இந்த முகாமில் விவசாயிகளுக்கு அனுபவமிக்க தொழில்நுட்ப வல்லுனர்கள் மூலம் செயல்விளக்கங்கள் வழங்கப்படுகிறது. மேலும் அடியுரம் இடுதல், இயந்திரம் மூலம் நடவு செய்தல், இலை வண்ண தழைச்சத்து நிர்வாகம், இயந்திரம் மூலம் அறுவடை செய்தல், நோய்தாக்குதல் மற்றும் விதை சேமிப்பு ஆகிய தொழில்நுட்பங்களுக்கான ஆலோசனைகள் 6 பண்ணைப் பள்ளிகளில் நடக்கப்படும். எனவே ஆதிக்குடிகாடு, சென்னிவனம், ராயம்புரம், காவேரிப்பாளையம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் பண்ணைப் பயிற்சி பள்ளிகளில் விவசாயிகள் பங்கேற்று பயன் பெற வேண்டும் என்றார்.

**மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறை**

சேதுபாவாசத்திரம், : மக்காச்சோள பயிரை தாக் கும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது: மக்காச்சோள பயிரை தாக்கும் பூச்சிகளில் மிக முக்கமானது தண்டு துளைப்பான், கதிர் துளைப்பான் மற்றும் வேர் கருகல் நூற்புழு ஆகும். தண்டு துளைப்பான் தாக்கிய பயிர்களில் இலைகள் சுரண்டபட்டிருக்கும், நடுக்குருத்து வாடி காய்ந்து இருக்கும். தண்டில் துவாரம் காணப்படும். இவற்றை கட்டுப்படுத்த விதைத்த 16வது நாள் குயினல்பாஸ்.5ஜி 6 கிலோ அல்லது கார்பரில்4ஜி 8கிலோ குருணை மருந்தினை 20 கிலோ மணலுடன் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் உள்ள செடியின் நடுக்குருத்தில் இடவேண்டும். குருணை இட தவறும் பட்சத்தில் விதைத்த 20வது நாள் குயினல் பாஸ்25 இ.சி 400 மில்லி அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் 400 கிராம் மருந்தினை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும். தண்டு துளைப்பான் மட்டுமின்றி மூக்குவண்டு மற்றும் அசுவினி பூச்சிகளும் கட்டுப்படுகிறது. வேர் கருகல் நூற்புழு தாக்கினால் இளம்செடிகள் கருகி காய்ந்துவிடும். இதனை கட்டுப்படுத்த கார்போ பியூரான்.3ஜி குருணை மருந்து 12 கிலோவை ஒரு ஏக்கர் பரப்பில் நடவு குழியில் இட வேண்டும். விதையுடன் இடவேண்டும். கதிர் துளைப்பான் தாக்குதலால் பால் பருவ மணிகள் சேதமடைந்திருக்கும். இதனை கட்டுப்படுத்த கார்பரில் 10 சத மருந்து 10 கிலோ அல்லது கார்பரில் 50 சத நனையும் தூள் மருந்து 400 கிராம் இவற்றில் ஏதேனும் ஒன்றினை பூக்கும் தருணத்தில் ஒரு முறையும் பின்பு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் ஒரு ஏக்கர் பரப்பில் தெளிக்க வேண்டும். இவ்வாறு பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள் வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## கோயம்பேடு மார்க்கெட் காய்கறி கழிவுகளில் இருந்து அடுத்த மாதம் முதல் மீண்டும் மின்சாரம் உற்பத்தி



சென்னை,
கோயம்பேடு மார்க்கெட்டில் சேரும் காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் மீண்டும் அடுத்த மாதம் (மார்ச்) முதல் செயல்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காய்கறி கழிவுகள்

ஆசியாவிலேயே 2–வது பெரிய மார்க்கெட் என்று பெயர் பெற்ற சென்னை கோயம்பேடு மார்க்கெட் 65 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த மார்க்கெட்டில் 1,900 காய்கறி கடைகளும், 700 பழக்கடைகளும், 450 பூக்கடைகளும் உள்ளன.

கோயம்பேடு மார்க்கெட்டில் தினசரி சராசரியாக 120 முதல் 150 டன் வரை காய்கறிகள், பழங்கள் மற்றும் பூக்களின் கழிவுகள் சேருகின்றன.

இதை அகற்ற கோயம்பேடு மார்க்கெட் நிர்வாகக் குழு அலுவலகம் சார்பில் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் டெண்டர் கோரப்பட்டது.

கடந்த 2010–ம் ஆண்டு தனியார் நிறுவனத்துக்கு ஒரு டன் குப்பையை மார்க்கெட்டில் இருந்து அகற்ற ரூ.871.50 என கட்டணம் நிர்ணயித்து ஒப்பந்தம் வழங்கப்பட்டது. மேலும் வீணாகும் காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரித்து தமிழ்நாடு மின்வாரியத்துக்கு விற்க வேண்டும் என்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

<u>மின்சார உற்பத்தி</u>

அதன்படி ரூ.5 கோடியே 50 லட்சம் செலவில் கோயம்பேடு மார்க்கெட்டில் திடக்கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் (ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பணி) அமைக்கப்பட்டது. கடந்த 2011–ம் ஆண்டு மின்சார உற்பத்தி எந்திரம் பழுதாகியது.

இதனையடுத்து 3 வருடங்களாக மின்சார உற்பத்தி முற்றிலுமாக நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் செக் குடியரசு நாட்டில் இருந்து நவீன எந்திரம் வாங்கப்பட்டு கடந்த 2014–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் மீண்டும் மின் உற்பத்தி நடைபெற்றது.

இந்த நிலையில் மீண்டும் அந்த எந்திரத்தில் பழுது ஏற்பட்டு கடந்த 8 மாதங்களுக்கு மேலாக மின் உற்பத்தி செய்யப்படாமல் இருக்கிறது. தற்போது சம்பந்தப்பட்ட நிறுவனம், அந்த எந்திரத்தை சரிசெய்யும் பணியை தொடங்கியுள்ளது. அடுத்த மாதம் (மார்ச்) முதல் காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் செயல்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கோயம்பேடு மார்க்கெட் நிர்வாகக்குழு அதிகாரிகள் கூறியதாவது:–

<u>அடுத்த மாதம்…</u>

காய்கறி கழிவுகளில் இருந்து நாள் ஒன்றுக்கு 2 ஆயிரத்து 500 யூனிட் மின்சாரம் தயாரிக்கவேண்டும் என்பது இலக்கு. ஆனால் 1,000 முதல் 1,200 யூனிட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. கடந்த 8 மாதங்களுக்கு மேல் அந்த மின்சாரமும் எந்திரக்கோளாறு காரணமாக உற்பத்தி செய்யப்படவில்லை

எந்திரத்தை சரிபார்க்கும் பணிகளை ஒப்பந்தம் போட்ட அதே நிறுவனம் செய்து வந்தது. தற்போது எந்திரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் சரிசெய்யப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. அடுத்த மாதம் (மார்ச்) முதல் வாரத்தில் இருந்து மின்சாரம் உற்பத்தி தொடங்கும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வரட்டாறு அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு 5,108 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன்பெறும்



தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவுப்படி வரட்டாறு நீர்த்தேக்கத்தில் இருந்து பாசனத்திற்கு தண்ணீரை கலெக்டர் விவேகானந்தன் நேற்று திறந்து வைத்தார். இதன்மூலம் 5,108 ஏக்கர் விவசாயநிலங்கள்பயன்பெறும்.

தண்ணீர்திறப்பு

தர்மபுரி மாவட்டம் அரூர் தாலுகா வள்ளி மதுரை கிராமத்தில்

அமைந்துள்ள வரட்டாறு நீர்த்தேக்கத்தில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறக்க தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார். இதன்படி தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி நேற்று மாலை நடந்தது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் விவேகானந்தன் தலைமை தாங்கி பாசனத்திற்கு தண்ணீரை திறந்து வைத்தார். பின்னர் மதகில் இருந்து வெளியேறிய தண்ணீர் மீது மலர் தூவப்பட்டது. நிகழ்ச்சியில் அரூர் எம்.எல்.ஏ. டில்லிபாபு, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன், அரூர் உதவி கலெக்டர் கவிதா, அரூர் ஒன்றியக்குழு தலைவர் தென்னரசு, ஒன்றிய செயலாளர் முருகன், உதவி செயற்பொறியாளர் சரவணக்குமார் உதவி பொறியாளர் மாலதி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் கலெக்டர் விவேகானந்தன் தெரிவித்ததாவது:-

அதிகவிளைச்சல்

தமிழக முதல்-அமைச்சரின் ஆணைக்கிணங்க வரட்டாறு நீர்த்தேக்கத்தில் இருந்து 2015-2016-ம் பசலி பாசனத்திற்காக தற்போது தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. முதல் 10 நாட்களுக்கு தொடர்ந்து பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கும், பின்னர் நேரடி பாசனத்திற்கு 10 நாட்களும் தண்ணீர் விடப்படும். பின்னர் 5 நாட்கள் தண்ணீர் திறப்பு நிறுத்தப்படும்.

3 நனைப்புகளுக்கு மொத்தம் 103.68 மி.க.அடி தண்ணீர் 5,108 ஏக்கர் நிலம் பயன் பெறும் வகையில் 50 நாட்களுக்கு திறந்து விடப்படுகிறது. இதனால் வள்ளிமதுரை, தாதரவலசை, சாமநத்தம், கீரைப்பட்டி, குடுமியாம்பட்டி, அச்சல்வாடி, சாமநத்தம்புதூர், எல்லப்புடையான்பட்டி, நாச்சினாம்பட்டி, கிளாப்பாறை, ஈட்டியம்பட்டி, மாம்பாடி, செல்லம்பட்டி, மாவேரிப்பட்டி, கம்மாளப்பட்டி ஆகிய 15 கிராமங்கள் பயனடையும். விவசாய பொதுமக்கள் பொதுப்பணித்துறையினருடன் உரிய ஒத்துழைப்பு அளித்து தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெறும் நோக்கத்துடன் செயல்பட வேண்டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார்.

## திண்டுக்கல்லில் இருந்து பல்வேறு இடங்களுக்கு செல்லும் ஆந்தூரியம் மலர்கள்



காதலர் தினத்தையொட்டி திண்டுக்கல்லில் இருந்து ஆந்தூரியம் மலர்கள் பல்வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

காதலர்தினம்

உலகம் முழுவதும் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காதலர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் இளம் உள்ளங்களில் இருந்து பொங்கிப்பெருகும் அன்பினை தங்கள் மனம் கவர்ந்தவர்களுக்கு வெளிப்படுத்துவார்கள். இதற்காக வாழ்த்து அட்டைகள், பரிசு பொருட்கள் மட்டுமின்றி ரோஜா உள்ளிட்ட வண்ண மலர்களையும் பரிமாறிக்கொள்வதுவழகக்கம்.

காதலர் தினத்தில் இளம்பெண்களின் மனங்களை விலை மதிப்புள்ள பரிசுகளை விட அதிகமாக கவர்வது மலர்கள் மட்டுமே என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இதனால் காதலர் தினத்தன்று மலர்களுக்கு அதிக அளவில் தட்டுப்பாடு ஏற்படுவது வழக்கம். இந்த மலர்கள்

பட்டியலில் பெண்கள் வழக்கமாக கூந்தலில் சூடிக்கொள்ளும் மல்லிகை, முல்லை, பிச்சிப்பூ, கனகாம்பரம் போன்றவை இல்லை. இதற்கு மாறாக ரோஜா, ஆந்தூரியம் உள்ளிட்ட பல்வேறு மலர்களுக்கு முக்கியத்துவம் அதிகம்.

ஆந்தூரியம்மலர்கள்

இதனால் திண்டுகஃகல் மாவட்டம் தடியன்குடிசையில் பசுமை குடில்களில் உற்பத்தியாகும் ஆந்தூரியம் மலர்கள் காதலர் தினத்தையொட்டி சென்னை, பெங்களூரு உள்பட பல்வேறு பகுதிகளுக்கும் ஆண்டு தோறும் அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த மலர்கள் ஒரு வார காலம் வரை வாடுவதில்லை என்பதும் அவற்றின் சிறப்பாகும். மேலும், பல்வேறு வண்ணங்களில் இந்த மலர்கள் அனைவரின் கண்களையும் கொள்ளை கொள்ளும் வகையில் இருக்கிறது. இதனால் தற்போது இந்த மலர்கள் வெளியூர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. ஒருவார காலம் வரை வாடுவதில்லை என்பதால் வெளிநாடுகளில் இந்த மலர்களை அதிகமாக பயன்படுத்துகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கலெக்டர் பழனிசாமி ஆய்வு**



விற்குடியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கலெக்டர் பழனிசாமி ஆய்வு செய்தபோது எடுத்தபடம்.

விற்குடி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கலெக்டர் பழனிசாமி நேரில்ஆய்வுசெய்தார்.

கலெக்டர்ஆய்வு

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியத்திற்குட்பட்ட விற்குடி கிராமத்தில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் உள்ளது. இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை கலெக்டர் பழனிசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது நெல் கொள்முதல் செய்வதில் எடையளவு சரியாக உள்ளதா எனவும், நாள் ஒன்றுக்கு எத்தனை மூட்டை நெல் கொள்முதல் செய்யப்படுகிறது எனவும், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை உடனடியாக இயக்கவும் பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும் நெல் தூற்றும் எந்திரத்தை பார்வையிட்டு சரியாக இயங்குகிறதா என பார்வையிட்டு நெல்லில் கற்கள், பதர்கள் இல்லாமல் நெற்களை தூற்றுமாறு கூறினார். பின்னர் ஈரப்பதம் சோதனை செய்யும் கருவியினை பார்வையிட்டு ஈரப்பதம் 17 சதவீதத்திற்கு குறையாமல் இருக்க வேண்டுமெனவும், பணியாளர்களின் வருகை பதிவேட்டினை ஆய்வு செய்து, காலை 9.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய வேண்டுமெனவும், பணியாளர்கள் கவனமுடனும், பொறுப்புடனும் பணியாற்றவும்அறிவுறுத்தினார்.

நிவாரணதொகை

அதைதொடர்ந்து கங்களாஞ்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு சென்று கலெக்டர் பழனிசாமி ஆய்வு செய்தார். அப்போது கங்களாஞ்சேரி, ராராந்திமங்கலம், விற்குடி, வாழ்குடி, காரையூர் ஆகிய கிராமங்களை சேர்ந்த பொதுமக்களுக்கு வெள்ள நிவாரண தொகை சரியாக சென்றடைந்துள்ளதா என கேட்டறிந்தார். பயிர் காப்பீடு செய்துள்ள அனைவருக்கும் விடுபடாமல், வெள்ள நிவாரண தொகை வழங்குமாறு அலுவலர்களை அறிவுறுத்தினார். யாருக்காவது வெள்ள நிவாரண தொகை வழங்கப்படாமல் நிலுவையில் இருந்தால் அவர்களுக்கு விரைவில் சென்று சேர வழிவகை செய்ய வேண்டும் என்று

அலுவலர்களை கேட்டுக்கொண்டார். ஆய்ீவின்போது தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளர் ராமதாஸ், வருவாய் ஆய்வாளர் சந்திரகலா மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

## பரமத்திவேலூர் பகுதியில் மரவள்ளி கிழங்கு விலை உயர்வு



பரமத்திவேலூர் பகுதியில் மரவள்ளி கிழங்கின் விலை உயர்ந்து உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

மரவள்ளிகிழங்குபயிரீடு

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகாவுக்கு உட்பட்ட பரமத்தி, கபிலர்மலை, அண்ணா நகர், வாழவந்தி, பெருங்குறிச்சி, சோழசிராமணி, திடுமல், பாகம்பாளையம், சின்னமருதூர், கூடச்சேரி, காசப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளி கிழங்கு பயிர் செய்து உள்ளனர்.

இந்த பகுதியில் விளையும் மரவள்ளி கிழங்குகளை புதன்சந்தை, புதுச்சத்திரம், மின்னாம்பள்ளி, செல்லப்பம்பட்டி, ஆத்தூர், மலைவேப்பங்குட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சிப்ஸ் தயார் செய்பவர்களுக்கும், சேகோ தொழில் சாலைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

விலைஉயர்வு

மேலும் மரவள்ளி கிழங்கு அதில் உள்ள டார்ச் மற்றும் பாயிண்ட் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த நிலையில் கடந்த வாரம் 1 டன் மரவள்ளி கிழங்கு ரூ.4,000 வரை விற்பனையானது.

இந்த வாரம் மரவள்ளி கிழங்கு டன் ஒன்று ரூ.4 ஆயிரத்து 500-க்கு விற்பனை ஆனது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் மரவள்ளி கிழங்கின் வரத்து குறைந்து உள்ளதால் விலை உயர்வு அடைந்த உள்ளதாக மரவள்ளி பயிரிட்டு இருக்கும் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். மரவள்ளி கிழங்கின் விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## திருவாரூரில் இருந்து தர்மபுரிக்கு அரவைக்காக 1,112 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



திருவாரூர் மாவட்ட பகுதிகளில் சம்பா பருவத்தின் அறுவடை காலம் தொடங்கி விட்டது. மாவட்டம் முழுவதும் நெல் அறுவடை பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. அறுவடையாகும் நெல்லை விவசாயிகளிடம் இருந்து நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலமாக அரசு கொள்முதல் செய்து வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல்லை, வெளி மாவட்டங்களில் உள்ள அரிசி ஆலைகளில் அரவை செய்வதற்காக அனுப்பி வைக்கும் பணி தற்போது தொடங்கி உள்ளது. நேற்று திருவாரூரில் இருந்து தர்மபுரிக்கு நெல் மூட்டைகளை அனுப்பி வைக்கும் பணி நடந்தது.

இதையொட்டி திருவாரூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள நேரடி கொள்முதல் நிலையங்களில் இருந்து 1,112 டன் சன்ன ரக நெல் மூட்டைகள் 107 லாரிகளில் திருவாரூர் ரெயில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டது. இதைதொடர்ந்து நெல் மூட்டைகளை சுமை தூக்கும் தொழிலாளர்கள் சரக்கு ரெயிலின் 29 பெட்டிகளில் அடுக்கி வைத்தனர். பின்னர் சரக்கு ரெயில் 1,112 டன் நெல் மூட்டைகளுடன் தர்மபுரிக்கு புறப்பட்டுசென்றது.

இதேபோல் நீடாமங்கலத்தில் இருந்து 1,100 டன் சன்ன ரக நெல் அரவைக்காக தர்மபுரிக்கு சரக்கு ரெயிலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

**ஈரோட்டிற்கு அரவைக்காக 1000 டன் நெல் சரக்கு ரெயிலில் அனுப்பிவைக்கப்பட்டது**




நீடாமங்கலத்தில் இருந்து 1000 டன் நெல் அரவைக்காக ஈரோட்டிற்கு சரக்கு ரெயிலில் அனுப்பும் பணி நேற்று நடந்தது. இதையொட்டி நீடாமங்கலம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இருந்து 87 லாரிகளில் 1000 டன் நெல் மூட்டைகள் நீடாமங்கலம் ரெயில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டன. பின்னர் சரக்கு ரெயிலின் 29 பெட்டிகளில் நெல் மூட்டைகளை சுமை தூக்கும் பணியாளர்கள் அடுக்கி வைத்தனர். இதைதொடர்ந்து சரக்கு ரெயில் 1000 டன் நெல் மூட்டைகளுடன் ஈரோட்டிற்கு புறப்பட்டு சென்றது.

## சாத்தனூர் அணையில் இருந்து விவசாய பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு



தண்டராம்பட்டு

சாத்தனூர் அணையில் இருந்து விவசாய பாசனத்திற்கு நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன், கலெக்டர் ஞானசேகரன் ஆகியோர் தண்ணீரை திறந்து விட்டனர்.

119 அடி தண்ணீர்

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு வட்டத்தில் உள்ள சாத்தனூர் அணையில் இருந்து திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

சாத்தனூர் அணையின் மொத்த உயரம் 119 அடி, மொத்த கொள்ளளவு 7,321 மில்லியன் கனஅடியாகும். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு பெய்த மழை காரணமாக சாத்தனூர் அணை நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டி 119 அடியாக உள்ளது.

தண்ணீர் திறப்பு

அதைத்தொடர்ந்து விவசாய பாசனத்திற்கு அணையில் இருந்து தண்ணீர் திறக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டிருந்தார். அதன்படி நேற்று சாத்தனூர் அணையில் இருந்து வலது மற்றும் இடது புற கால்வாய்கள் மூலம் விவசாய பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.

அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன், கலெக்டர் ஞானசேகரன் ஆகியோர் தண்ணீரை திறந்து விட்டனர்.

வலது புற கால்வாய் மூலம் வினாடிக்கு 200 கன அடி தண்ணீரும், இடது புற கால்வாய் மூலம் வினாடிக்கு 290 கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தில் 19,463 ஏக்கர் விவசாய நிலங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் பாசன வசதி பெறுகிறது.

<u>4 கட்டங்களாக...</u>

அதேபோன்று திருவண்ணாமலை மாவட்டத்தில் 34 ஏரிகளும், விழுப்புரம் மாவட்டத்தில் 72 ஏரிகளும் பயன் பெறுகின்றன. முதல் கட்டமாக வருகிற 27–ந் தேதி வரை வினாடிக்கு இடது புற கால்வாய் மூலம் 290 கன அடி தண்ணீரும், வலது புற கால்வாய் மூலம் 200 கன அடி தண்ணீரும் திறக்கப்படுகிறது. இரண்டாவது கட்டமாக 27–ந் தேதி முதல் அடுத்த மாதம் 13–ந் தேதி வரை இடது புற கால்வாயில் 370 கன அடியும், வலது புற கால்வாயில் 220 கன அடியும் தண்ணீர் திறக்கப்படுகிறது. 13–ந் தேதி முதல் 18–ந் தேதி வரை தண்ணீர் நிறுத்தப்படுகிறது.

3–வது கட்டமாக அடுத்த மாதம் 18–ந் தேதி முதல் ஏப்ரல் மாதம் 17–ந் தேதி வரை இடது புற கால்வாயில் 370 கன அடியும், வலது புற கால்வாயில் 220 கன அடியும் தண்ணீர் திறக்கப்படுகிறது. 17–ந் தேதி மாலை முதல் 22–ந் தேதி மாலை வரை 5 நாட்களுக்கு தண்ணீர் நிறுத்தப்படுகிறது.

பின்னர் 4–வது கட்டமாக ஏப்ரல் மாதம் 24–ந் தேதி முதல் மே மாதம் 22–ந் தேதி வரை இடது புற கால்வாய் மூலம் 370 கன அடி தண்ணீரும், வலது புற கால்வாய் மூலம் 220 கன அடி தண்ணீரும் திறக்கப்படுகிறது.

<u>எம்.பி., எம்.எல்.ஏ.க்கள்</u>

நேற்று நடந்த நிகழ்ச்சியில் ஆர்.வனரோஜா எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் ஏ.கே. அரங்கநாதன், சுரேஷ்குமார், பொதுப்பணித்துறை

செயற்பொறியாளர் கோவிந்தராஜன், உதவி செயற்பொறியாளர் அருணகிரி, உதவி பொறியாளர்கள் ரமேஷ், வாசுகி, கேசவராஜ், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் எம்.எஸ்.நைனாக்கண்ணு, பாசனக்குழு தலைவர் தேவராஜ், எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் எஸ்.ஆர்.தருமலிங்கம், ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர்கள் ராஜா வி.தேவராஜன், எல்.புருஷோத்தமன், செங்கம் தொகுதி செயலாளர் பாண்டியன், ஒன்றியக்குழு தலைவர்கள் எம்.கணேசன், ஜானகிராமன், தானிப்பாடி நகர இளைஞர் அணி செயலாளர் அருள்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.